Vl. No. 38   20 Sep 1928

N28.1.38.
189021

Reg. No. M. 2324.

# கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

20 NOV 1928 MADRAS

| வருஷ சந்தா | | காரியாலயம்:— |
| --- | --- | --- |
| இந்தியா, பர்மா, ஸிலோன் | ரூ. 7 8 0 | No. 11, வெள்ளாளர் தெரு, |
| புற நாடு ... ... | ரூ. 9 0 0 | புரசைபாக்கம், சென்னை. |

Vol 1.] 1928ளு செப்டம்பர் மீ 20உ [No. 38.

பொருளடக்கம்.

| | பக்கம். | | பக்கம். |
| --- | --- | --- | --- |
| 1. தலையங்கம் (Leader) | 741 | 5. தமிழ்ப் பாடம் | 749 |
| 2. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. | 743 | 6. கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L. | 751 |
| 3. தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A., B.L. | 745 | 7. மதிப்புரை | 754 |
| 4. சூர்ப்பநகை R. முத்தையர் | 747 | 8. கார்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. | 756 |
| | | 9. வர்த்தமானம் | 759 |

## கலா நிலயம்.

### நாடகத்தின் நலம்.

கலையெனும் நலத்தினால் நமக்குறுதி நல்கவல்ல பலவற்றுள் கல்விமிக இல்லாத மாந்தரையும் எளிதில் தன்வயப் படுத்துந் தன்மைவாய்ந்த நாடகக் கலையினை நன்கு போற்ற வேண்டுமெனும் ஊக்கம் இந்நாளில் ஒருசிறிது பிறந்துளது. எங்கெங்கும் இரவுதோறும் ஆரவாரஞ் செய்கின்ற அரங்க மேடைகளும், ஊமைச் செய்தியாய் நிழற்பூச்சி யாடுகின்ற நெடுந்திரைச் சீலைகளும் நாடகக் கலை பயிலும் இடங்கள் ஆகா. பாட்டும் பகட்டுடையும் இடுதிரையும் அதிர்வெடியும் நாடகங்கள் என்னும் நினைவுமுற்றி, கதையின் கட்டும் பாத்திரப் பொருத்தமும் நவில்கின்ற மொழிகளின் நயமும் கருதி மதிப்பதற்குரிய பயிற்சி இல்லாதவர் தாம் பெரும்பான்மை அவைகளை ஆடுவோரும் ஆதரிப்போருமாய் அமைந்திருத்தலால், நாடக இறைவி கலையெனும் பீடம்விட் டிழிந்து காசுக்குக் கத்துபவளாய் அலைந்து திரிகின்றாள். இந்நிலை அவளுக்கு வந்தெய்தியது, நாடகத்தி லீடுபட்டிருப்பவர் நடிக்குந் திறனற்றவர்களா யிருத்தலாலன்று. நாடக அரங்கினைத் தமக்கொரு தொழிலாகக்கொண்டவர்களிலும் ஒழிந்த நேரத்திற்கொரு விளையாட்டாய் வைத்திருப்பவர்களிலும் காட்சிக் கினிமையாய் நயம்பல தெரிந்து நடிக்கவல்லவர் பலர் உளர். ஆயினும், நாடகக்கலை இற்றைநாள் தனக்குரிய பெருமையை எய்தாமலும் அதனால் விளைவதற் கொத்த பயன் மாந்தரிடை விளையாமலும் அழிவது ஏனெனில், தக்க காரணம் உளது.

நடிப்பதற்கென்று எடுத்துக்கொண்ட கதையும் அக்கதையை நிகழ்த்தும் வாக்கியங்களும் நன்கமைந்திருத்தல் வேண்டும் என்னும் நினைவு இல்லாமையே முதலும் முக்கியமுமான குறை. பெருங் காவியங்களாய் இருப்பவைகளே நடிப்பதற்கும் உரியனவாகும். கலைஞரின் உள்ளக்கிடக்கை காவிய நூல்களாகத் தோன்றிய காலையில் அதனை அனுபவிக்கப் புகுவோர் தம் கருத்தைக் கொண்டுபோய் நேராகக் காவியத்தின் கருத்தோடு கலந்துவிடுகின்றனர். இன்னவர்க்குப் புலன்களின் உதவி வேண்டியதில்லை. ஆனால், இவ்விதம் கருத்தைக் கருத்தோடு சேர்த்திணைத்துக் கொள்வதற்கு மனமானது முன்னரே அத்துறையில் ஓரளவு பயிற்சியடைந்திருக்க வேண்டும். ஆதலின் மெய்வருந்தி இப்பயிற்சியைப் பொறுமையோடு பெறுவதற்குச் சலியாத மாணவர்க்கே காவியங்கள் உதவிபுரிய இயலும். எக்காலத்திலும் எந்நாட்டிலும் இவ்வகையினர் சிற்சிலரே இருப்பர். எனின் மற்றவர்கள் கலைகளின்பால் சிறிதேனும் உறவென்பதின்றி நிற்க வேண்டியவர்கள் ஆகின்றனர். எத்திறத்தானும் மாந்தரை இந்நிலையே நின்றுகழிய விட்டு விடுதல் நாட்டிற்கு நன்மையாகாது. ஒருவனுக்குக் கலையுணர்வு இல்லையெனில் அவன் வேறு சில உடையவனாயினும் ஒன்றும் இல்லாதவன் என்னும்படி வாழ்வு சிதறி மனித இனத்தினின்றுந் தாழ்ந்து விடுகின்றான். ஒருவன் இவ்வாறு தாழ்ந்தால் அவனைச் சுற்றி ஒன்பது பேருக்குத் துன்பம்

கூடவே தோன்றும். ஆதலின் அவரவரால் இயன்றவளவு பிறர் இவ்வகை இழிவுறுவண்ணம் காக்க வேண்டியது யாவருக்கும் கடமை ஆகின்றது. இக்கடமையை ஆற்றுதற்கு ஏற்ற விடம் நாடகமேடையென்று ஆய்ந்த அறிவுடைய பலர் கூறக்கேட்டிருக்கின்றோம். அயலுதவியின்றி நமது உள்ளமே கொண்டு காவியங்களை அனுபவிப்பதற்குப் பயிற்சி முதிர்ந்திருந்தாலன்றிப் பயனில்லையென்று முன்னரே கூறியுள்ளோம். காதும் கண்ணும் உடன் சேர்ந்து உதவி செய்யவல்லவோர் வழியில் காவியங்களைத் தோற்றுவிப்போமாயின் மனமானது வருத்தமில்லா வழியில் மெல்ல மெல்லக் கலையின்பால் கவரப் படுதலும் கூடும். போதனு முறையில் மனதின் சக்தியை முதலில் பெரிதும் எதிர்பாராமல் காட்சியாலும் ஓசையாலும் கற்றுத் தருவது சிறந்த தென்பதை யாவரும் அறிவர். இது உண்மையாயின் கலையுணர்ச்சி பயிற்றுவிப்பதனிலும் இம்முறையை மறத்தல் கூடாது. காவியத்தின் சுவையையும் கருத்தையும் நடிப்பவர்கள் கண் சாடையாலும் குரலின் வேறு பாட்டாலும் கையின் அசைவாலும் நிற்கும் நிலையாலும் காட்ட வல்லவர். ஷேக்ஸ்பியர் நாடக நூல்களை ஓதுங்கால் காணப் பெறுதனவும், பிறர் புகன்றாலும் தெரிந்து கொள்ள இயலாததுமான பல இன்ப நயங்கள் அவை நடிக்கப் பெறுங்காலையில் புதிது புதிதாய்த் தோன்றிக் கற்றோரையும் மகிழ்விக்கு மென்பது உலகறிந்த விடயமாம். ஆதலின் காண்பவர் தம் மனத்தேர்ச்சிக்கு ஏற்றவாறு காவியங்களின் கருத்துரை போதிக்கும் வன்மை நாடகங்களுக்குளது. இந்தத் தொழிலை நாடகம் சரிவர நடத்த வேண்டுமாயின் நடிப்பதற்கு அமைந்த நூல் கருத்தின் ஆழமும் இன்பமும் அழகும் தன்னுளே தங்கப் பெற்றதா யிருத்தல் வேண்டுமென்று கூறல்மிகை. பாத்திரத்தி லிருந்தாற்றான் அகப்பையில் வருமென்னும் உண்மையை அறிதல் அருமையன்று. நடிக்கின் நாடகங்கள் கற்பனைத்திறம் வாய்ந்த காவியங்களா யிருத்தல் வேண்டும். இருந்தால் தான் நயம்பட நடிப்பதற்கும் நலம்பெறக் காண்பதற்கும் இடமுளது.

இந்த விதியைக் கொண்டு இந்நாள் அரங்கேறும் தமிழ் நாடகங்களை மதிப்போமாயின் அவைதமால் இன்பமேனும் நன்மையேனும் கலைகளுக்கு உதவியேனும் எய்தாதிருப்பது வியப்பல்லவே. இராமாயணம் பாரதம் முதலிய காவியங்களின் கதைகளையே பெரும்பான்மை நடிக்கின்றனர் என்பது உண்மை. ஆனால், கதைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு அதனையும் பலவகைகளில் சிதைத்து விடுகின்றனர். மேலும் கதையின் அமைப்பு இயங்குகின்ற உடலேயாக, இயக்குகின்ற உயிராயு மிருப்பது அக்கதையை நிகழ்த்திக் கொண்டு போகின்ற கவியின் மனோபாவம் பொதிந்துள சொற்க ளென்பதற்கையமில்லை. காவியக்கதைகளை நடிப்பவர்கள் அச்சொற்களைப் போற்றாது அகற்றிவிட்டுத் தம்முடைய வாயில் வருவனவற்றை விளம்பத் தலைப்படுகின்றனர். இடமில்லா இடத்தில் பொருளில்லாப் பாட்டுக்கள் புகுந்து புகுந்து கதையையுமே விழுங்கிவிடவும் நேர்கின்றது.

வேறு சிலர் புராணக் கதைகளெல்லாம் பழையன வென்று கழித்துவிட்டுப் புதியதாய்ச் சில நாடகங்கள் இயற்றி நடிக்கப் புகுகின்றனர். இவ்வாறு இயற்றுகின்ற தற்கால நாடக ஆசிரியர் தமிழிற் பெரிதும் புலமை யுடையாரென் றியம்புதற்கியலாதென்னல் புதுமையன்று. தமிழ்ப் பயிற்சி எத்துணை உடையவராயினும் கம்பருக்கும் வில்லிபுத்தூராருக்கும் நிகராகாரென்பதை அவர்களேயும் மறுத்திடார். ஆயின், அப்பெரியார்களது கட்டுரைகளைக் கைநடக்க விட்டுவிட்டுத் தம்முடைய வார்த்தைகளை வழங்குவதேனோ!

பண்டைநாள் காவியக் கதைகளை மீண்டும் மீண்டும் நாடகமாக நடிப்பதாற் பயனில்லை யென்றும் சிலர் கொள்கின்றனர். இவர்கள் கலையின் வளர்ச்சிக்கு ஏற்ற களம் நாடக அரங்கு என்பதை மறந்தோ உணராமலோ அதனைச் சனங்களின் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தும் பள்ளிக்கூடங்களாகக் கருதுகின்றனர். சனவாழ்க்கையில் காணக் கிடக்கும் தீமைகளை நாடகமேடையில் நடித்துக் காட்டினால் அச்சனங்கள் திருந்துவார் என்னுங் கொள்கை மேற்பார்வைக்கு உண்மையாய்த் தோன்றுமானாலும் ஆழ்ந்து ஆராயின் நினைத்த நன்மை பயக்காததோ டமையாது எத்தீமையைத் தீர்க்க வந்ததோ அதனையே பெருக்கும் குணமுடைய தென்பதை ஓர்ந்து கொள்ளலாம். தீமைகளை எடுத்துக் காட்டுவதால் அவை ஒழியா. பாடசாலையில் மாணவர்க்கு, "இவ்வாறு வரைதல் பிழை; அதை விலக்குங்கள்" என்று விலக்குதற்கும் பிழைகளை எடுத்துக் காட்டப்படா தென்பர். இது தக்கதே. நேரிது எதுவென்று தேரத்தேரப் பிழைகள் தாமாக விலகல் வேண்டும். நன்மையின்கண் வாய்மையின்கண் நேர்மையின்கண் மாந்தர்க்கு ஒரு ஆசை வந்தெய்துவ தொன்றே அவை அல்லாதனவற்றிற்கு இடந்தாராததாகும். மற்று, இங்கிலாந்தில் பர்னார்ட் ஷா போன்ற பேரறிஞர் இவ்வகை நாடகங்கள் எழுதுகின்றனரே என்று ஆர்வ மொழிகள் பல பகர்வார், நம் நாடக ஆசிரியர்கள் பர்னார்ட் ஷாக்கள் அல்லர் என்பதை மறந்தது பெரிதல்ல. இந்தப் பர்னார்ட் ஷாவின் நாடகங்களால் இங்கிலாந்து திருந்தியது எவ்வளவு என்று தம்மையே வினவிக் கொள்ளாமையே வியப்புடைத்தாம்.



# சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

## பொருள் ஆராய்ச்சி.

[725-ம் பக்கத் தொடர்ச்சி]

### உயிர் தவழும் உடலம்.

அதனால் அல்லவா பெரியபுராணத்திலுள்ள புராணங்களில் கண்ணப்ப நாயனார் புராணம் தலைசிறந்து விளங்குவது. அப்பெரிய புராணத்தில் மூன்றுநான்கு புராணங்கள் முதலணியில் வைக்கத் தகுந்தவை. தடுத்தாட்கொண்டபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம், திருக்குறிப்புத் தொண்டர் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம் என்ற இவற்றைப் புகழாதவர்கள் ஒருவரும் இல்லை. திருக்குறிப்புத்தொண்டர் புராணம் பேர் பெறுவது திருக்குறிப்புத் தொண்டரைப் புகழ்வதால் அல்ல. சேக்கிழார், தாமும் திருக்குறிப்புத் தொண்டரும் பிறந்த நாட்டைக் கற்பனைகள் ததும்பும் பாடல்களைப் பாடிப் புகழ்வதால் ஆகும். அதன் அருமையை அறியாதவர்களுக்கு அக்கதையின் அழகெல்லாம் மற்றொன்று விரித்தலாய் முடிகின்றது. தடுத்தாட்கொண்ட புராணமும் திருஞானசம்பந்தர் புராணமும் அவர்களது வரலாற்றைக் கூறவந்தன. அப்புராணங்களை அன்போடும் ஆர்வத்தோடும் மனமுருகச் செவிகுளிரப் பாடுகின்றார். படித்தாலும் வாய்மணக்கு மந்தப் பாக்களைப் படிக்கவும் பல தவங்கள் செய்திருத்தல் வேண்டும். ஆனால் அப்பெரியோர்கள் சேக்கிழார்பெருமானுக்குமுன் ஐந்து நூற்றுண்டுகளுக்குள் உயிர்வாழ்ந் திருந்தவர்கள். ஆதலினாலே அவர்களது வரலாறுகள் ஒருவாறு நன்கறியப் பட்டிருந்தன எனலாம். கண்ணப்பரோ பல நூற்றுண்டுகளுக்கு முன் னிருந்தவர். அவர் கதையினை அருளாலே அறிந்தார் அருண்மொழித் தேவர். அரிஸ்டாடல் என்ற யவன நாட்டுப்போறிஞர் கதைக்கும் வரலாற்றுக்கும் வேற்றுமை காட்டுவர். வரலாறு நடந்ததைக் கூறுவதாம்; கதையோ உண்மையைக் கூறுவதாம். ஒருவனது வரலாற்றிலே அவனது வாழ்க்கையின் உண்மைகள் நன்கு புலனாவது இல்லை. எங்கிருந்தோ மின்னல்போல வந்து பிறக்கின்றான். மறுபடியும் எங்கோ பறந்து மறைகின்றான். அவனோடு உலகத்திற்குள்ள தொடர்பு, அவன் முடிக்கவந்த வேலை, அவன் வாழ்க்கையின் மறைபொருள், நெளிவு சுளுவுகள் இவை எல்லாவற்றையும் கடவுள் தவிர வேறொருவரும் தெரிந்துகொள்ள முடியாது. அவரவர்கள் வாழ்ந்த காலத்து மக்கள் தமது விருப்பிற்கும் அறிவிற்கும் ஏற்ப எதையெதை நினைவில் வைத்துக் கொள்கின்றார்களோ அவைதாம் அவர்களது வரலாறாகி முடிகின்றன. பாவலனோ தனது தெய்வத் திருவருளால் உண்மை யறிந்து ஒரு கதை எழுதுகின்றான். தலைவனது முன்னைய நிலை, பின்னைய நிலை, நடுநிலை; அவனது வாழ்க்கை; வாழ்க்கையின் பொருள்; முதலியவற்றைத் திருவருள் திறத்தால் படைத்துப் பாடுகின்றான். கடவுளுக்குத் தான் தெரியும் என்று கண்குருடாகிக் கதற வேண்டுவதில்லை. அவன் கதையில் எல்லாம் வெட்ட வெளிச்சமாக இருக்கின்றது. அவன் கூறுவன உள்ளபடி நடந்தனவல்ல என்று கூறலாம். ஆனால் அவன் கூறவந்தவை பொருள்களின் உண்மை நிலையை நமக்கு அறிவூட்டுகின்றன. அதுதானே நமக்கு வேண்டுவது, ஊரும் பேரும் நமக்கேன்? கடவுளின் கருத்தையே அறிவிக்கின்றது கதை. அவ்வாறு சிறந்து விளங்குவது கண்ணப்பர் கதை என்று இவ்வளவும் கூறி வந்ததால் நன்கு புலனாகின்றது.

### பலரும் பல்வகை யாதல்

கண்ணப்ப நாயனாரது அன்பின் பெருமையை அறிந்தோம். கதையின் ஒவ்வொரு பகுதியும் இதனையே வற்புறுத்துகின்ற தென்பதையும் கண்டோம். கதையிலே வருகின்ற மற்றைய பெயர்வழிகளும் கண்ணப்பரது அன்பின்பெருமையையே விளக்க வந்துள்ளார்கள். அவர்களைப்பற்றியும் சிறிது ஆராயவேண்டும். ஒருவர் போல ஒருவர்இருப்பது உலகிலே இல்லை எனலாம். இல்லாமற்போனால் ஒருவரினும் ஒருவரை வேறு பிரித்தறிவது முடியாது போய்விடும். யார் நமக்கு நன்மை செய்தார், யார் நமக்குத் தீமை செய்தார், என்று அறிந்து உலகியலை நடத்துவது இயலாது. எல்லோரையும் ஒருங்கே பகைக்க வேண்டுவதுதான்; எல்லோரிடத்தும் பரிவுகொள்ள வேண்டுவதுதான். அண்ணன் தம்பியை அறிய முடியாது; தாய் பிள்ளையை அறிய இயலாது. பெண்டாட்டியை அகமுடையான் தெரிந்து கொள்ள முடியாது. பேச்சாலும், குரலாலும் உடையாலும் நடையாலும் உடலாலும் மனத்தாலும் பழக்க வழக்கங்களாலும் மக்கள் வேறுபட்டிருப்பதை நாம் நாள்தோறும் கண்கூடாகக் கண்டு வருகிறோம். அது போலவன்றோ கதையில் வருபவர்களும் இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு ஒவ்வொருவரும் வேறுவேறாகத் தோன்றுவது தெய்வப்புலவர்கள் பாடிய சிறந்த கதைகளில்தான். மற்றையோர் எழுதிய கதைகளில் எல்லாம் ஒரு போக்குத்தான்; எல்லாரும் ஒரே நடையில்தான் பேசுவார்கள். அந்த நடையும் அந்த நூலை எழுதியவாது நடையாக இருக்கும். ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கவிவாணர் பாடிய கூத்துநூல்களில் வரும் எதும் கெட்ட ஏழைவேலைக்காரன் பேசுவது போலவும் நடப்பது போலவும் மற்றொரு வேலைக்காரன் பேசுவதில்லை, நடப்பதில்லை, என்று அறிஞர்கள் புகழ்கின்றனர். அங்ஙனமே நமது சேக்கிழாரும் தமது கதையில் வருவோர் ஒவ்வொருவரையும் வேறுபிரித்துத் தனிச்சிறப் பியல்பு உடையவராகவே விரித்துரைத்து உண்மையை விளக்குகின்றார். அதனாலல்லவா இவரையும் தெய்வப்புலவர் என்பது.

### சிவகோசரியார்.

கண்ணப்பருக்கு அடுத்தபடியில் நமது கதையில் சிறந்து விளங்குபவர் சிவகோசரியார் ஆவர். கண்ணப்பரோடு சிவகோசரியாரை ஒன்றாக வைத்தெண்ணி அவரையும் இக்கதைக்கு ஒரு தலைவராகக் கொண்டார் காளத்திபுராணம் உடையார். தமது கதைக்குக் "கண்ணப்பரும் சிவகோசரியாரும் முத்தி அடைந்த அத்தியாயம்" என்று பெயரும் வைத்தார். சேக்கிழாரோ சிவகோசரியார் முத்தியடைந்த கதை முழுவதையும் கூறுகின்றார் அல்லர். தமது கண்ணப்பர் கதைக்கு வேண்டிய தெவ்வளவோ அவ்வளவே எடுத்துச் சொல்கின்றார். ஆனாலும் அந்த அளவுக்குள்ளேயே சிவகோசரியாரது சிறப்பினை அளவின்றிப் பேசி முடிக்கின்றார்.

கறுப்பி னருகேதான் வெண்மை பளிச்சென்று தெரிகின்றது. நிழலருமை வெய்யிலிலே. நல்ல பிள்ளையின் பெருமை கெட்ட பிள்ளை பிறந்த பிறகு தான் விளங்குகின்றது. ஆகவே பெரும் புலவர்கள் தமது கதையிலே நல்லவனைப் புகழ வேண்டுமானால் கெட்டவனையும் புனைந்துரைத்து வேற்றுமை காட்டித் தமது கருத்தினை விளக்கி வைப்பார்கள். இராமனது பெருமையை அறிவிப்பதற்கு ஒரு இராவணன் வேண்டும். மது தலையாகி நிற்போர் கொடியவராகவே இருக்க வேண்டுவ

இல்லை. இராமன் எதிரில் பரதன் எத்தனை உயர்ந்தவனாகத் தோன்றுகின்றான். அதுபோலவே சிவகோசரியாரது எதிரே கண்ணப்பர் உயரிய அன்பராக விளங்குகின்றார். கண்ணப்பரது அன்பிற்கு ஒருவகையில் மாறுபட்டது சிவகோசரியார் அன்பு என்று முன்னர்க் கூறினோம். ஆனால் இரண்டும் முடிவில் ஒன்றுதான். போகும் வழிகள்தான் வெவ்வேறாக இருக்கின்றன. ஒவ்வொரு கோயிலிலும், கடவுளை வழிபடுவதையே தமது வயிற்றை வளர்க்கும் தொழிலாகக்கொண்ட ஆதிசைவரது குடியிற்பிறந்த ஏழைப் பார்ப்பனர் ஒருவர் என்று தோன்றுமாறு சிவகோசரியாரை நக்கீரர் முதலியோர் புகழ்கின்றனர். ஆனால் அன்புநெறியில் நின்ற கண்ணப்பருக்கு எதிரே அறிவுநெறியில் தலைசிறந்து விளங்கிய ஒரு பெரியாரை நிறுத்துகின்றார் சேக்கிழார். வெறும் ஏழைப் பார்ப்பானைக் கூறினால் அவருக்கெதிரே கண்ணப்பருக்கு என்ன பெருமை வந்துவிடப் போகிறது!

சேக்கிழார் சிவகோசரியாரைச் சிறந்த முனிவராகவே சிறப்பித்துக் கூறுகின்றார். அவரை அந்தணர் என்று சேக்கிழார் சொல்லாமல் இல்லை. அந்தணனார் (149) என்கின்றார். ஆனால் அச்சொல்லுக்குத் திருவள்ளுவர் உரைத்ததுபோல நீத்தார் என்றே பொருள் கொள்ள வேண்டும். சேக்கிழார் நமது கதையில் மற்றைய இடங்களில் எல்லாம் சிவகோசரியாரை முனிவர் என்றே வழங்குவதால் இங்கும் அச்சொல்லிற்கு நீத்தாராகிய முனிவர் என்று பொருள்கொள்வதே பொருத்தமுடையதாகும். அப்பெரியார் பார்ப்பனர் குடியில் பிறக்கவில்லை என்று வற்புறுத்த யாம் வரவில்லை. "பார்ப்பான் அன்றிது செய்தான் இன்றும் அவன் செய்ததாகும்" (109) என்பதினின்று அப்பெரியார் அக்குடியில்தான் பிறந்தார் என்பது தெளிவாகின்றது. ஆகவே அதனை மறைக்க நம்மால் முடியாது. அருள்பழுத்த நெஞ்சினர் என்பதனையே வற்புறுத்துகின்றோம். சேக்கிழார் இதனை உறுதிப்படுத்தவே பின்னரும் "அருள்முனிவர்" (156) என்று இவரைப் புகழ்கின்றார். சிவகோசரியார் உலகின் நிலையாமையை உணர்ந்து உலகவாழ்க்கையை விட்டுக் காட்டிலே சென்று தவஞ்செய்து வாழ்ந்துவந்தனர். மனதை அடக்கி ஆண்டனர். அவரது மனம் அல்லாடுவதில்லை; அமைதியாகத் திகழ்ந்தது. இவற்றையெல்லாம் "தணிந்த மனத் திருமுனிவர் தபோவனத்திடைச் சார்ந்தார்" என்றும், 'புனைதவத்து மாமுனிவர்' (164) என்றும் சேக்கிழார் கூறுவதிலிருந்தும் உய்த்தறியலாம். முனிவர் ஆவார் தூய மனமுடையவராய்ப் பேரறிவு பெற்று வாழ்வாரே யாவர். அறிய வேண்டுவதெல்லாம் அறிந்து, அறிவிற்கு முடிவாயுள்ள பொருளையும் அறிந்து, அதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு, கற்றோர் விழுங்கும் கனியைக் காதலால் உண்டு உவப்பவர்களே மாமுனிவர்கள். அத்தகையவரே நமது சிவகோசரியார் என்பதைக் குறிக்க அவரைப் பன்முறையும் "திருமுனிவர்" என்றும் "மாமுனிவர்" (184 & 164) என்றும் ஏத்துகின்றார். அத்தகைய தணிந்தமனத் திருமுனிவர் பேரறிஞராகிய சிறந்தஞானி என்றும் புகழ்கின்றார். "ஞானமா முனிவர் கண்டார் (184) என்கின்றார். எனவே, கண்ணப்பர் அன்பு நெறியில் தலைசிறந்து நின்றதுபோலச் சிவகோசரியார் அறிவுநெறியில் தலைசிறந்து நின்றார் என்பது தெளிவாகின்றது.

இத்தகைய உயர் நெறியில் நின்றவர்,

"செம்மலர் நோன்றாட் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்றபடி, எல்லாம் கைவந்த அறிஞராயினும் பழைய வழக்கத்தால் தலை காட்டும் மயக்கத்தை ஒழிப்பதற்கு ஒருவழியாக வேறொன்றிலும் மனதை அலையவிடாது ஆலய வழிபாட்டினை நாள்தோறும் செய்துவந்தனர். அவ்வழிபாட்டினை நூல்கள் சொல்லியபடி செய்து வருபவர் என்பது தோன்ற அவரை "மறைமுனிவர்" என்றும் "அருமறை முனிவனார்" என்றும் நமக்கு நினைப்பூட்டுகின்றார் சேக்கிழார். காகா என்று கதிரவன் காலையில் எழும்போதே எழுந்திருந்தார். திருமுகலியாற்றில் மூழ்கிக் குளித்தார். எந்தவெந்த மலர்கள் இறைவனுக்கு ஏற்றனவென்று ஆகமங்கள் கூறியுள்ளனவோ அந்தஅந்த மலர்களை எல்லாம் பறிக்குமுறையறிந்து பறித்துக்கொண்டார். திருமஞ்சனமாட்டத் திருமுகலி யாற்றினின்று நீரும் எடுத்துக்கொண்டார். இவற்றை எந்தவகையாக எடுத்துக்கொண்டுபோகவேண்டும் என்று ஆகமங் கூறி இருக்கின்றதோ அந்தவகையாகக் கொண்டுவந்தார்.

எய்தியசீ ராகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டணைந்தார்
மைதழையும் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்

என்கின்றார் சேக்கிழார். சிவகோசரியார் அன்போடும் அச்சத்தோடும் மனதை அடக்கி ஒருமுகப்படுத்தி நூல்கள் கூறுவதுபோல இறைவனெதிரே சென்றார். இறைச்சியும் எலும்பும் கண்டார். திடுக்கிட்டு அப்புறம் குதித்தோடினார். இப்போதுதான் நம் கண்ணெதிரே சிவகோசரியார் திடுக்கிட்டு ஓடுவதுபோலத் தோன்றும்படி சேக்கிழார் பாடியுள்ளார்.

வந்துதிரு மலையின்கண் வானவர்நா யகர்மருங்கு
சிந்தையிய மத்தோடும் செல்கின்றார் திருமுன்பு
வெந்தஇறைச் சியுமெலும்பும் கண்டகல மிதித்தோடி
இந்தஅனு சிதங்கெட்டே னியார்செய்தா ரென்றழிவார்

"ஐயோ இப்படியும் நடப்பதா" என்று உள்ளம் பதைத்தார். அழுதார். மனம் பொறாது கீழ்வீழ்ந்து புரண்டு புரண்டு அலறினார். கதறினார்.

மேவநேர் வரவஞ்சா வேடுவரே இதுசெய்தார்
தேவதே வேசனே திருமுன்பே இதுசெய்து
போவதே இவ்வண்ணம் புகுதநீர் திருவுள்ளம்
ஆவதே எனப்பதறி அழுதுவிழுந் தலமந்தார்.

பிறகு, சிவனே, பொழுதாய் விட்டதே, என்று எழுந்து திருவலகிட்டு அவற்றை அப்புறப்படுத்தி மறுபடியும் மலையேறி இறங்கிமுகலியாற்றில் மூழ்கிக்குளித்தார். தன் வருத்தத்தை எண்ணி முணுமுணுத்தாரா? முகம் கோணினாரா? சிறிதும் இல்லை. விருப்பினொடும் செய்தார் என்கின்றார் சேக்கிழார்.

பொருப்பிலெழுஞ் சுடர்க்கொழுந்தின்
  பூசனையுந் தாழ்க்கான்
இருப்பதினி என்னென்றவ்
  விறைச்சியெலும் படிநிலையும்
செருப்படியும் நாயடியும்
  திருவலகால் மாற்றியபின்
விருப்பினொடுந் திரிமுகலிப்
  புனன்மூழ்கி விரைந்தணைந்தார்

நீட்டு நீங்குதற்கு வேண்டிய கழுவாய் எல்லாம் செய்தார். நூல்கள் சொல்லியதில் ஒன்று விடாதும், முறை தவறாதும் வழிபாட்டைச் செய்து முடித்தார். பெரும்



னைப் பலவாறாக நூல்கள்சொல்லிய சொற்கள் கொண்டே போற்றிப் புகழ்ந்தார்.

பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனைதொடங்கி
வழுவிறிரு மஞ்சனமே முதலாக வரும்பூசை [தார்.
முழுதுமுறை மையின்முடித்து முதல்வனார் கழல்பணிந்

பணிந்தெழுந்துதனிமுதலாம்பரனென்றுபன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து சுடர்த்திங்கள்
அணிந்தசடை முடிக்கற்றை அங்கணரை விடை [கொண்டு
தணிந்தமனத் திருமுனிவர் தபோவனத்தி னிடைச் [சார்ந்தார்.

கண்ணப்பரது வழிபாட்டிற்குப் பெரிதும் வருந்தி மனம் நொந்துநொந்து தம் வழிபாட்டை மறைவழியே புரிந்துவந்தார்.

மாமுனிவர் நாடோறும் வந்தணைந்து வனவேந்தர்
தாமுயலும் பூசனைக்குச் சாலமிகத் தளர்வெய்தித்
தீமையென அதுநீக்கிச் செப்பிய ஆகமவிதியால்
ஆமுறையி லருச்சனை செய்தர் நெறியி லொழுகுவரால்

ஒருநாள் போலப் பலநாளும் பழுது புகுவதுகண்டு மனமிகப் புழுங்கி இந்தப் பெருந்தீங்கு இனி நேராதபடி தடுத்தாட்கொண்ட தம்பிரானே தடுத்தாள வேண்டுமென மன்றாடி வேண்டினார்.

அங்கிலையி லன்பனார் அறிந்தநெறி பூசிப்ப
மன்னிய ஆகமப் படியால் மாமுனிவர் அருச்சித்திங்
கென்னுடைய நாயகனே இதுசெய்தார் தமைக்காணேன்
உன்னுடைய திருவருளால் ஒழித்தருள வேண்டுமென

இரந்தழுதார். திருவடியார் கண்ணீர் சிந்துவதைக் கண்டு பொறாது கருத்தழியும் சிவபெருமான், சிவகோசரியார் மனம் நோவதுகண்டு அம்முனிவர்பெருமானது கனவிலே வந்தருளித் திண்ணனாரது அன்பின் செவ்வியினையும் அருந்தொழில் திறத்தினையும் அவரியல்பின் பெருமையினையும் அவர் நிலையி னருமையினையும் எடுத்து ஓதி உளங்குளிர்வித்தார்.

அன்றிரவு கனவின்கண் அருமுனிவர் தம்பாலே
மின்திகழும் சடைமவுலி வேதியர்தாம் எழுந்தருளி
வன்திறல்வே டுவனென்று மற்றவனை நீ நினையேல்
நன்றவன்றன் செயறன்னை நாமுரைக்கக் கேளென்று

விரித்துரைத்துத் திருவாய் மலர்ந்தருளினார்.

மறுநாள் காலையிலே கண்ணப்பரது பெருமையைக் கண்கூடாகக் காணலாம் என்று தெரிவித்துப் போயினார். என்ன வியப்பு என்ன வியப்பு. இறைவனேபுகழும் இவ்வேடுவன் யாரோ என வியந்தார். அவ்வேடுவர் எத்தகைய பெரியவரோ எனமனதில் அச்சமும் உண்டாயிற்று. இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. இந்த வியப்பும் அச்சமும் நக்கீரரும் கூறுகின்றார். ஆனால் நக்கீரர் கதையிலே வரும் சிவகோசரியார் கண்ணப்பரைப் பல நாளாக அறிவர். அவ்வேடனது உருவுகண்டு அஞ்சினவர். ஆனால் சேக்கிழார் அவ்வாறு கூறவில்லை. சேக்கிழாரது கண்ணப்பர் பரிந்து மனம் குழைந்து ஊட்டுவதைக் கண்டபின் எத்தகைய மறைமுனிவரும் அவரைப் போற்றாதிருக்கமாட்டார்கள். ஆகவே சிவகோசரியாரையும் திண்ணனாரையும் கண்ணப்புவதற்குமுன் ஒருவரை ஒருவர் பார்க்கவைத்திலர் சேக்கிழார். கடைசி நாளில் வியப்பெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து வெளிவருகின்றது.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

# தேவாரமும் ஐந்திணையும்.

(732-ம் பக்கத் தொடர்ச்சி)

## 2. திணைகளின் மூவகைப் பொருள்.

(IX) பூ-ஒவ்வொரு திணைக்கும் வெவ்வேறு பூக்கள் உரியனவாகும். அவை காணவேண்டிய திணையன்றி வேறு திணையிற் காணப்படின் திணைமயக்கம் நேரும். திணைப்பகுதிகளில் உள்ள பூக்களைத் தேவாரத்திற் காண்போம் :—

(i) குறிஞ்சி-இத்திணைக்குரிய பூ *காந்தள், வேங்கை யெனப்படும். சூளாமணியில் மலைநிறைந்த கலிங்க நாட்டரசனைக் கூறுமிடத்து "காந்தளங்கட் கமழ்குலையாற் களிவண்டு களிறகற்றும் கலிங்கநாடன்" என்றனர் தோலாமொழித் தேவர். தேவாரத்தில் காணப்படும் காந்தள் அத்துணை பெரியதுமன்று; களிற்றைப் பயமுறுத்தும் வண்டுகளும் தேவாரத்திலில்லை. அத்தகைய பயங்காளி யானைகளையும் மூவர் மொழியவில்லை. இயற்கையில் எப்பொருள்களை எவ்வாறு கண்டனரோ அவ்வாறே அவர் தேவாரத்தில் திருவாய் மலர்ந்தருளினார். அவை பெரும்பாலும் புகைப்படம் பிடித்ததுபோல் விளங்கும்:-

உரைசேரு மெண்பத்து நான்குநூ
  றாயிரமாம் யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
  யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
  நடமாட வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதர மென்காந்தள்
  கையேற்கு மிழலையாமே.

—சம்பந்தர்.

வெய்யதண் சாரல் விரிசிற வேங்கைத் தண்போது
செய்யபொன் சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தைய லோர்பாக மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டி
லையமுங் கொள்வ ராரிவர் செய்கை யறிவாரே.

—சம்பந்தர்.

(ii) முல்லை:—இத்திணைக்கு உரிய பூ, முல்லைப்பூ. முல்லையென்பது மல்லிகைச் சாதியிற் சேர்ந்ததாயினும், இது அத்துணை மணமின்றி, உருவத்திலும் சிறியதாய்த் தலைசிறுத்துக் காம்புநீண்டிருக்கும். இம்மலரை மல்லிகை யென்றே உலகவழக்கிலும் கடைகளிலும் சொல்லுவாராயினும், மல்லிகைமலர் வேண்டுவோர் இதனைக்கடிவர். மல்லிகை மருதநிலத்திற் கடுத்த சோலைகளில் வளரும். முல்லையோ கொடிகளை யுடையதாய்க் காட்டில் தானே படரும்:—

*சுனைக் குவளையும் நச்சினார்க்கினியர் இத்திணையிற் கூறுகின்றார். அதை அப்பர் தேவாரத்திற் காண்க:—

(1) சுனையுணீலஞ் சுளிபு நெடுங்கணாள் இளையனென் றென்று மேசுவ தென்கொலோ?"

(2) "சுனையுணீல மலரன கண்டத்தான்"

சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச்
 சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
 டருளிய விறைவனே! யென்றும்
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயில்
 நாதனே! நரைவிடை யேறீ!
பல்கலைப் பொருளே! படுதுயர் களையாய்
 பாசுபதா! பரஞ் சுடரே! —சுந்தரர்

குறிப்பு:-இப்பாசுரத்திற்கு அடுத்தபாசுரம், "விரைதரு மலர்மே லயனொடு மாலும்" என்று ஆரம்பித்தலால், சுந்தரர் முல்லையைக் குறித்து மேற்கண்ட பாட்டில் மொழியுங்காலை, அது பரிமளம்மிகவும் குறைந்ததென்று எண்ணியதுபோல் திருக்கடைக்காப்புப் பாசுரம் விளங்குகின்றது:—

விரைதரு மலர்மே லயனொடு மாலும்
 வெருவிட நீண்ட வெம்மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற்
 செல்வனை நாவலா ரூரன்
உரைதரு மாலையோ ரஞ்சினோ டஞ்சு
 முன்குளிர்ந் தேத்த வல்லார்கள்
நரைதிரை மூப்பு நடலையு மின்றி
 நண்ணுவர் விண்ணவர்க் கரசே.
 —வட திருமுல்லைவாயில்-பண்-தக்கேசி. 11.

(iii) பாலை:—இத்திணைக்கு உரிய பூக்கள், மரா, குரா, பாதிரி என்பன. இவை மணம் பெற்றிருப்பினும் மாந்தர் அணிவனவல்ல:—

[இவை வேறுதிணைகளிலே பெரும்பாலும் தேவாரத்திற் காணலாம். அங்ஙனம் வரலாமென்பதற்கு விதி:—
"திணைமயக் குறுதலுங் கடிநிலையிலவே"
 —தொல்காப்பியம்-பொருள் 12.]

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
 வருடியும் வணக்கியு மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
 காம்பிலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரி துருத்தியார் வேள்விக்
 குடியுளா ரடிகளைச் செடியனே னாயேன்
உரையுமா றறிகிலே னெம்பெரு மானை
 யுலகறி பழவினை யறவொழித் தானை.
 —சுந்தரர்.

புல்லி யிடந்தொழு துய்துமென் றூதவர்
 தம்புர மூன்றும் பொடிபடுத்த
வில்லி யிடம்விர வாதுயி ருண்ணும்வெங்
 காலனைக் கால்கொடு வீந்தவியக்
கொல்லி யிடங்குளிர் மாதவி மவ்வல்
 குராவ குளங்குருக் கத்திபுன்னை
அல்லி யிடைப்பெடை வண்டுறங் குங்கலி
 கச்சிய னேகதங் காவதமே —சுந்தரர்.

கோங்கு செண்பகம் குருந்தொடு பாதிரி
 குரவிடை மலருந்தி
ஓங்கி நீர்வரு காவிரி வடகரை
 மாந்துறை யுறைவானைப்
பாங்கி னால்இடுந் தூபமும் தீபமும்
 பாட்டவி மலர்சேர்த்தித்
தாங்கு வாரவர் நாமங்க ளுவினிற்
 றலைப்படுந் தவத்தோரே. —சம்பந்தர்.

(iv) மருதம்:—இத்திணைக்குச் சிறந்ததாய் எடுக்கப்பட்ட பூக்கள் தாமரையும் கழுநீருமாம்:—

தூயவிரி தாமரைக ணெய்தல்
 கழுநீர் குவளை தோற்றமருவுண்
பாயவரி வண்டுபல பண்முரலு
 மோசைபயில் மாகறலுளான்
சாயவிர லூன்றிய விராவணன்
 தன்மைகெட நின்றபெருமா
னாயபுக ழேத்துமடி யார்கள்
 வினையாயினவு மகல்வதெளிதே. —சம்பந்தர்.

(v) நெய்தல்:—இத்திணையிற் சிறந்த பூவெனப்பட்டவை கைதையும் நெய்தலுமாம்:—

கொண்ட நீலமும் புரைதிரு மிடறர்
 கொடுமுடி யுறைபவர் படுதலைக்கையர்
பண்டல ரயன்சிர மரிந்தவர் பொருந்தும்
 படர்சடை யடிகளார் பதியத னயலே
வண்டலும் வங்கமும் சங்கமும் சுறவு
 மறிகடற் றிரைகொணர்ந் தெற்றியகரைமேல்
கண்டலும் கைதையும் நெய்தலும் குலவும்
 கழுமல நினையநம் வினைகரி சறுமே.
 —சம்பந்தர்.

X. புள்:—ஒவ்வொரு திணைக்கும் உரிய பறவைகள் வெவ்வேறாம். பஞ்சரத்திலிட்டு வளர்க்கும் கிளி, குறிஞ்சிக்கு உரியது. தாமரைப் பொய்கைகளில் உலாவும் அன்னங்கள் நெய்தல் நிலத்திற்கே உரியன. இவ்வாறு திணைப்பேதத்திற்குத் தக்கவாறு தேவாரத்திலும் பேதங் காணலாகும்:—

எந்நில மருங்கிற் பூவும் புள்ளு
மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.—தொல்காப்பியம்.

(i) குறிஞ்சி:—இந்நிலத்திற்குரிய புள், கிளியும், மயிலுமாம்:—

மன்னிப்புனங் காவன்மட மொழியாற் புனங்காக்க
கன்னிக் கிளி வந்துகவைக் கோலிக் கதிர்கொய்ய
என்னைக் கிளி மதியாதென்று வெடுத்துக் கவணெலிப்
தென்னற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே [பத்
 —சுந்தரர்.

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டு பாடமயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச்சுனை நீலமொட்டலருங் கேதாரமே
 —சம்பந்தர்.

(ii) முல்லை:—இத்திணைக்குரிய பறவைகள் கானக்கோழியும், சிவலுமாம்:—

வேருலா மாழ்கடல் வருதிரை யிலங்கை
 வேந்தன தடக்கைக ளடர்த்தவ னுலகில்
ஆருலா மெனதுரை தனதுரை யாக
 வாகமே ராவணிந் தழிதரு மண்ணல்
வாருலா நல்லன மாக்களுஞ் சார
 வாரண முழிதரு மல்லலங் கானல்
ஏருலாம் பொழிலணி யிலம்பையங் கோட்டூர்
 இருக்கையாய்ப் பேணியென் னெழில்
 கொள்வதில்லையே—சம்பந்தர்.

எற்றேநினை யென்னொடு சூளறும் வைகலும்
மற்றேதும் வேண்டா வல்வினை யாயின மாய்ந்தறக்
கற்றூறு கார்க்காட்டிடை மேய்ந்த கார்க்கோழி போய்ப்
புற்றேறிக் "கூகூ" வெனவழைக்கும் புனவாயிலே
 —சுந்தரர்.



(iii) பாலை:—இத்திணையின் பறவைகளாவன:—

கழுது, பருந்து, புறு. இவற்றினுட் கழுகும், பருந்தும் சுடுகாட்டிற் குரியன. இவற்றைக் கண்ணுற்ற நமது சமயாசாரியார் மிகவும் கருணையுடன் நோக்குவா ராயினரென்பது தேவாரத்திற் காணலாம். புறு பாலைநிலம் அல்லது பாழ் நிலத்திற்குரிய பறவையாதலால் வீட்டில் வளர்க்கக் கூடாதென்பர் மேலோர். இக்காலத்திலும் அவ்வாறு நடப்பதையுங் காண்க.

கழுகு, பருந்து (பூனையும் புலியும்போல்) ஒரு இனத்தைச் சேர்ந்தவையே.

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணுமலை யதுவே
 —சம்பந்தர்.

[குறிப்பு:—பாலை யிலக்கணமுள்ள ஊரென்று வருந்திப் பாடிய ஸ்தலங்களில் அக்கருப் பொருள்கள் காண்பதற்கு அரியனவா யிருக்கின்றன]

(iv) மருதம்:—இத்திணைக்குச் சிறப்பாய்க் கூறப்படும் பறவைகள், தாரா (வாத்து) நீர்க்கோழி யென்னுமிரண்டே:—

நீரார வார்சடையா னீறுடையா னேறுடையான்
காரார்பூங் கொன்றையினான் காதலித்த தொல்கோயில்
கூரால் வாய்நிறையக் கொண்டயலே கோட்கடத்திற்
றாராமல் காக்கூரிற் றூன்றோன்றி மாடமே.
 —சம்பந்தர்.

(v) நெய்தல்:—இத்திணையின் புள், அன்னம், அன்றில் என்பன. அவை தேவாரப் பாசுரங்களாற் காண்க:—

சடையிடை புக்கொடுங்கி யுட்டங்கு வெள்ளம்
 வளர்திங்கள் கண்ணி யயலே
யிடையிடை வைத்ததொக்கு மலர்தொத்து மாலை
 யிறைவன் னிடங்கொள் பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து
 மணநாறு நீல மலருந்
நடையுடை யன்னம்வைகு புனலம் படப்பை
 நனிபற்றி போலு நமர்காள்! —சம்பந்தர்

குன்ற வார்சிலை நாணாராவரி
 வாளிகூரெரி காற்றின் மும்மதில்
வென்ற வாறெங்ஙனே
 விடையேறும் வேதியனே!
தென்ற லார்மணி மாடமாளிகை
 சூளிகைக் கெதிர்நீண்ட பெண்ணைமே
லன்றில் வந்தணையு
 மாமாத்தூ ரம்மானே! —சம்பந்தர்.

E. N. தணிகாசல முதலியார்.

## சூர்ப்பநகை.

சூர்ப்ப:+நக: என்னுந் தொடர் "ரஷாப்யாம் நோண: ஸமா நபதே" அதாவது ஒரே பதத்தில் ர, ஷ, என்னும் எழுத்துக்களின் பின் வருகிற நகரம் புணர்ச்சியில் ணகரமாகத் திரியுமென்ற விதிப்படியும்; "அஜாத்ய தஷ்டாப்" அதாவது அகாவீற்று விசேஷணங்கள் பெண்பாலில் வரும்போது பெண்பாற்குரிய ஆ, ஈ என்னும் விகுதிகள் பெற்று வருமென்ற விதிப்படியும் "சூர்ப்பணகா" என்று திரிந்து தோன்றி நின்றது. இம்மொழி தமிழிற் கியைந்து வரும்போது "ஆவீ றையும்" என்ற விதிப்படி சூர்ப்பணகை யென்றாகவேண்டும். ஈண்டு வடமொழிப் புணர்ச்சியை நீக்கித்தமிழிற்கியைய சூர்ப்பநகை யென்றெழுதப்பட்டது. இவ்விருசொல் ஒரு மொழிக்கு முறம்போன்ற நகங்களுடையவ ளென்று பொருள்.

இராமாயணமென்ற பெயர் தெரிந்தவர்கள் சூர்ப்பநகை யென்னும் பெயர் கேளாதிராரென்பது திண்ணம். இராமாயண கதைக்குச் சூர்ப்பநகை நடுநாயகமான ஓர் முக்கிய பாத்திரமாவள். சூர்ப்பநகையே இராவணன் இறத்தற்குக் காரண மேற்படுத்தினள். இப்பொருளை யுட்படுத்திக் கம்பநாடரும் சூர்ப்பநகையைக் குறிக்குமிடங்களிலெல்லாம்;

"நீல மாநிற நிருதர் வேந்தனை
 மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்
 மேலைநா ளுயிரொடும் பிறந்து தான்விளை
 காலமோர்ந் துடனுறை கடிய நோயனள்."

என்றும்,

"வன்றுணிருதக்குலம் வேரறமாய்த்தல் செய்வாள்"

என்றும்,

"தன்கிளைக்கிறுதி காட்டுவாள்"

என்றும்,

"வான்தொடர் மூங்கில் தந்த
 வயங்குவெந் தீயி தென்னத்
தான்தொடர் குலத்தை யெல்லாந்
 தொலைக்குமா சமைந்து நின்றாள்"

என்றும், பிறவும் பல காரணங்களுடன் குறித்துக் கூறுகின்றார். அதாவது, உயிருடன் பிறந்தநோய் தக்ககாலம் பார்த்து அவ்வுயிர்க்கிறுதி மூட்டுவதைப்போல, இராவணனுடன் பிறந்து அவனையே அரக்கர் கிளைஞரோடு முடிக்கு மொய்ம்புடையவள்; தன் குலத்தை வேரறமாய்க்கத் தலைப்பட்டவள்; மூங்கிலிற் பிறந்த தீயானது தான் பிறந்த மூங்கிற் கூட்டங்களனைத்தையு மொருங்கே மாய்த்தல்போல, தான் பிறந்த குலத்தை மூலத்தோடழிக்க முதன்மைப்பட்டு நின்றவள் என்பதாகும். இவ்வாறு சூர்ப்பநகை தான் பிறந்த குலத்தை முடிக்கக் கருதின காரணத்தை மண்டோதரியின் வாக்கில் வைத்து,

கொல்லாத மைத்துனனைக் கொன்றாயென்
 றதுகுறித்துக் கொடுமை கூர்ந்து
பல்லாலே யிதழதுக்குங் கொடும்பாவி
 நெடும்பார ப்பழிதீர்ந் தாளே

என்று குறிப்பிடுகின்றார். சூர்ப்பநகைக்கு இங்ஙனமொத்த வைராக்கியம் தன் கணவனை இராவணன் கொன்றநாளி லுண்டாயிற்று. அக்கொடும் பகையை மனதில் வைத்துத் தக்ககால மேற்பட எதிர்பார்த் திருந்தாள். காலம் வாய்த்ததும் தன் பகையெண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டாள். சூர்ப்பநகையின் கணவனை இராவணன் கொல்ல வேண்டிய காரண விவரங்கள் பிறகறியலாகும்.

பொதுத்தன்மையாக நோக்குமிடத்து இராமாயணத்தில் மந்தரையும் சூர்ப்பநகையும் ஒரு தன்மையுடையவராவர். எங்ஙனமெனில், துடிக்கும் நெஞ்சில் வளர்ந்திய வெகுளியினு ளினைக்கு மனதோடு எரிகாதும் கன்று

டன் கதிக்குஞ் சொல்லு முடையவளும், மூன்றுலகி னுக்குமோ ரிடுக்கண் மூட்டுபவளுமாகிய மந்தரை,

பண்டை நாளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டை யுண்டதனைத் தன்னுள்ளத் துன்னுவாள்.

அதாவது இராமன் சிறுவயதில் விளையாட்டாகச் செய்த வைகளைப் பகையாக மனதில் வைத்துக்கொண்டு தக்க காலமாகிய இராமனுக்கு முடிசூட்டும் சமயத்தில் வந்து கைகேசியின் மனத்தைத்திருப்பினள். அதன்பயன் இராமன் காட்டிற்கு வந்து பஞ்சவடியிலிருத்தல் வரையினு மாயிற்று. சூர்ப்பநகை தன் கணவனைஇராவணன் கொன்றதா லப்பழியை மனதில் வைத்துக்கொண்டு பழிக்குப் பழி வாங்கவெண்ணி இராவணன் மனதை மாற்றினள். அதனால் இராவணன் தன் வாழ்நாட் கிறுதி பெற்றான். ஆகவே இராமனைக் காட்டிற் கனுப்ப மந்தரை காரண மேற்படுத்தியதுபோலச் சீதையைச் சிறை யெடுத்துப் போவதற்குச் சூர்ப்பநகை காரண மேற்படுத்தினள். இராவண வதமாகிய பயன் பெறும்பொருட்டுச் சீதையி னழகாகிய விதையை இராவணன் மனதாகிற விளைநிலத்தைத் தக்கபடி பண்படுத்தி விதைத்தாள் சூர்ப்பநகை. அவ்விதை முளைத்து அன்பாகிய தடியில் காதலாகிய வைரம் பாய்ந்து சாகோப சாகையாக வளர்ந்து கோரிய பயனை அனைவரு மடையும்படி கொடுத்தது. இவை போன்றன நோக்குமிடத்துச் சூர்ப்பநகை இராமனுடைய ஏகபத்நி விருதத்தன்மையையும் சீதையின் கற்பின் பெருமையையும் விளக்கித் தேவர் முனிவராதியோர் இன்னலற் றின்படைய இராவணனுக்கு மிறுதி மூட்டி, ஆரணியகாண்ட முதலாயுள்ள காண்டங்களி லடங்கிய விவரங்களை நம்மனோர் படித்தறிந்து இன்ப மடைய வழிகாட்டியும் இன்னும் பல நன்மைகளுஞ் செய்திருக்கின்றாள்.

இராமன் வனத்திற்கு வந்து முதலில் விராதனைக் கொன்று பிறகு முனிவர்கள் அரக்கர் பயந் தவிர்ந்திருக்கவேண்டி அம்மாதவர்களோடு பத்துவருட மிருந்தான். இவ்வருடங்களில் விராதனைக் கொன்றதைத் தவிர வேறொருவிதச் செய்கையுஞ் செய்யவில்லை. பிறகு தண்டகவனத்தில் பஞ்சவடியில் வந்த பிறகும் சூர்ப்பநகை வரவில்லை யானால் ஆரணியகாண்டத்தோடு இராமாயணம் முற்றுப்பெறுமென்பதற் கையமுண்டோ? அங்ஙனமின்றித்தான் துன்பமடைந்தாவது பலகாரியங்கள் இராமனைக் கொண்டு நடத்திவைக்கக் காரணமாயிருந்த சூர்ப்பநகா தேவியின் வரலாறும், அவள் எவ்வாறு தான் கொண்ட காரியத்தைச் செய்தாளென்பதையு மிக்கட்டுரையா லறிவோம்.

சுமாலியின் மகளான கைகசி தன் தந்தையின் தூண்டுதலால் விசிரவசுவினிடஞ் சேர்ந்த தீயகால வேறுபாட்டால் இராவணன், கும்பகருணன், விபீடணனென்ற மூன்று புதல்வரைப் பெற்றனள். இவர்க் கிடையில்

"பண்ணார் மொழியா ளவள்வயிற்றிற்
பருத்த விடையும் பருங்கழுத்தும்
விண்ணார் மேகத் திடியென்ன
வெடித்த குரலு முடையாளாய்க்
கண்ணார் கனலும் புகையுமெழக்
கனன்று காலன் கருக்குலையப்
பெண்ணாய்ப் பிறந்தா ளனவந்து
பிறந்தாள் பெரிய சூர்ப்பநகை"

அதாவது, இன்சொற் கைகசி வயிற்றில் இடையும் கழுத்தும் பருத்து இடியொத்த குரலுடையளாய்க் கண்களிற் கனலெழக் காலனுங் கருக்குலையப் பெண்ணாகச் சூர்ப்பநகை பிறந்தாள். சூர்ப்பநகை யென்றால் முறம் போன்ற நகங்களுடையவளென்று முன் கூறிய நீண்டனுவாதமாகும். இவள் நகத்தை வைத்து விரல், கை முதலியவைகளைச் சினைமுதற் சம்பந்தமாக உய்த்துணரின் இவளுருவ மொருவாறு மனபடாத்திற் புலனாகும். இவள் இராவண கும்பகருணருக் கிளையாளும் விபீடணனுக்கு மூத்தவளுமாவள். சூர்ப்பநகையின் பிறப்பு உருவ முதலியன உற்று நோக்கினால் அவளது வளர்ச்சி எவ்வாறிருக்கு மெனக் கூறாமலே குறிக்கும். ஆயினும் இவளுடைய வளர்ச்சியையுஞ் செய்கையையுங் குறித்து ஆசிரியர்;

"வசையின் மறையோர் குடிப்பிறந்து
மாதர் குலத்தின் வழிநின்றும்
அசைவி லாற்றற் சூர்ப்பநகை
ஆறாய்ப் பிறந்தார் பின்தொடர்ந்து
பசையி னெஞ்சர் தமையெல்லாம்
பத்தா வாக வசிகரித்தும்
இசைவி லாதார் தமையெல்லாம்
எடுத்துப் புடைத்துத் தின்னுமால்"

என்று கூறி யிருக்கின்றார். அதாவது; குற்றமில் மறையோர் குடியிற் பிறந்து பெண்டிர் மரபுவழிநின்ற மிக்க வலியுடைய சூர்ப்பநகை,

"கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்"

என்ற வரம்புக்கு மீறி ஆடவர்பின் தொடர்வாள். அவர்களில் பற்றில்லா நெஞ்சர்களைத் தன் பர்த்தாவாக வேண்டுவாள். அதற்குடன் படாதாரைப் புடைத் தெடுத்துத் தின்பாள். இவ்வாறு சூர்ப்பநகை பருவ வயது பெற்றுத் தன்னுட்சிமுறையைச் செய்துவா லாயினள்.

இராவணாதியரும் தக்க வயதடைந்து தாமெதற்காகத் தோன்றினரோ அதன் பயனை யடையவெண்ணிக் கடுந்தவம் புரிந்து கடவுளரிடமிருந்து தமக்குவேண்டிய ஆயுள் முதலிய வரங்களும் ஆயுதங்களும் பிறவும் பெற்றனர். பிறகு அவர்கள் நடக்கைமாறித் தம் வரபல புயபலங்களால் குபேரனிடமுள்ள இலங்கைமா நகரத்தைப் பிடுங்கித் தமது தலைநகராகக் கொண்டு அங்கு வந்திருந்து பாதாளத்தினின்றும் வந்த தம்மினத்தாரோடு சிறிதும் பயமின்றித் தன்போக்காக அரசு செலுத்தலாயினர். இவர்களில் விபீடணனது குணங் குறி முதலியவைகள் ஏனையோர்க் கமைந்ததற்கு முற்று மாறுபட்டுள்ளனவே யாகும்.

இவ்வாறு இராவணன் அரசுசெலுத்தி வருங்கால் தன்னருமைத் தங்கை சூர்ப்பநகைக்கு விவாகஞ்செய்ய எண்ணினன். ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொடுக்க அவளுக்குத் தக்க வாலிபனைத் தேடவேண்டுவது பெண்ணைச் சேர்ந்தார் கடமையாகும். புருடனைச் சேர்ந்தார்க்கு மஃதொக்கும். அதுபோல் இராவணனும்;

"தடையில்லா வலியில்லை யாம்பயர்க்குத்
தம்முலகன் தம்மைத் தாங்க
இடையில்லை யென்னைப்போ லிமைப்பளவில்
எவ்வுலகு முட்டி மீளும்.
நடையில்லை யெனப்பழிக்கு நங்கையடற்
சூர்ப்பநகை நலத்தைக் கண்டு"

அவளுக்குத் தக்க வரனைத் தேடலானான். முடிவில் பலவா றுய்ந்து காலகேய மரபினனான வித்துருசிங்கனுக்குத் தன்தங்கையான சூர்ப்பநகையை விவாகஞ்செய்து கொடுத்தான். இவனை வித்யுத்சிருவன் என்றும் வித்யுஜிஹ்வனென்றுங் கூறுவதுண்டு. வித்ருசிங்கனும் தனக்குத் தகுந்த மனையாள் கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சி



யடைந்தான். தம்முள் ஒத்த தலைவனும் தலைவியுமாகிய இவ்விருவரும் இடையறா அன்புடன் இன்பந் துய்த்து வருநாளில் அதன்பயனாகச் சூர்ப்பநகை ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனே ஜம்புகுமார னென்னு மாக்கனுவான்.

இவ்வாறிருக்கும்போது இராவணன் திக்குவிஜயத்திற்குப் பல அரக்கருடன் புறப்பட்டான். பல திக்குக்களிலுஞ் சென்று பொருது வாகை சூடி, வருணனை வெல்லவேண்டி அவனது திசையில்வந்து அவனகரில் பொருது உழக்குங்காலையில்

"தன்னுடைய தங்கையாம் தடவரைத்தோள்
சூர்ப்பநகை தன்னைக் கொண்ட
மின்னனைய சுடரிலைவேல் வித்துருசிங்கன்
றன்னைவெங் களத்து வீழ்த்தான்"

அதாவது தன் தங்கையின் கணவன் வித்துருசிங்கனை மைத்துனனை இராவணன் அப்போர்க்களத்தில் மாற்றானென் றெண்ணி மயங்கி வாளால் வெட்டிவீழ்த்தினன்.

பிறகு இராவணன் வெற்றிகொண்டு இலங்கைமா நகர்க்கு வந்தபிறகு, வித்யுஜிஹ்வன் பட்ட செய்தியைச் சூர்ப்பநகைக் கறிவித்தார்கள். கேட்ட சூர்ப்பநகை ஆற்றாத் துயருடன் அயில் பாய்ந்த மயில்போன்றும் வேலேற்ற மான்போன்றும் கீழே விழுந்து புரண்டலறி உருகிக் கரைந்தாள். என்செய்வாள் பாவம்! பிறகெழுந்து தன்கணவ னிறந்துகிடக்கும் போர்க்களஞ்சென்று அவன்மேல் விழுந்து;

என்னிற்பின் சூர்ப்பநகை யிருக்குமோ விலளோவென்
றுன்னிச்சோ திப்பானுள் ளுயிரடக்கிக் கிடந்தாயோ
பின்னிற்கும் பழிபூண்டு பெருந்துயரப் பட்டுநான்
உன்னிற்பின் னிருக்கிலே னெழுந்திரா யுத்தமனே

என்று பலவாறழுது புலம்பி மூர்ச்சித்தாள். உடனே சூர்ப்பநகையைப் பல அரக்கியர் வந்து தடுத்துச் சமாதானஞ் செய்தும் ஆறுதலடையாமல் சிறிது களைப்பு நீங்கியதும் தன் கணவனைக் கொன்ற தமையன்முன் சென்று நாவைப் பிடுங்கிக்கொண் டிறப்பே னென்று இராவணன் முன்வந்து;

முலைப்பாலே நஞ்சாகி முனைமுகத்தி லொருக்காலும்
கொலைப்பாலனல்லாத்தன் மைத்துனனைக்கொலைசூழ்ந்த
புலைப்பாவி யுன்றமையன் பொல்லானென் றெல்லாரும்
அலைப்பாலே யறவலைந்தேன் அண்ணாவோ அண்ணாவோ

என்று பலவாறு புலம்பினள். இங்ஙனம் புலம்புவாளை யெடுத்து இராவணன் "தங்காய்! யானறியாது செய்தேன்; என் மதிமயக்கி உன்கணவனுயிருண்ட விதியை வெல்ல எவரால் முடியும்" என்று பல சமாதானங் கூறினன். பிறகு இராவணன் தன் தாயின் தங்கை வயிற்றிற் பிறந்த கரன், தூடணன், திரிசிரசு என்ற மூன்று அரக்கர்களையும் வரவழைத்துச் சூர்ப்பநகைக்குக்காட்டித் "தங்காய்! இவர்கள் தண்டக வனத்திருப்பார்கள், நீயு மிவர்களுடன் சென்று உன் சிந்தைக் குகந்தபடி களிப்போடிருப்பாயாக" வென்று கட்டளையிட்டான். அன்று முதல் சூர்ப்பநகை மூவரோடும் தண்டகவனம் வந்து தன்மனம் போனபடி நடந்து களிப்போடிருந்தாள்.

(தொடரும்) R. முத்தையர்.

# தமிழ்ப் பாடம் 38.

## நள வெண்பா

(729-வது பக்கத் தொடர்ச்சி)

### கலிதொடர் காண்டம்.

தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான் [பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயா டொழுது. 79.

பதப்பிரிவு:—தேன் பிடிக்கும் தண்துழாய் செம் கண் கரு முகிலை மான் பிடிக்க சொன்ன மயிலே போல் தான் பிடிக்க பொன் புள்ளை பற்றி தா என்றாள் புது மழலை சொல் கிள்ளை வாயாள் தொழுது.

அன்வயம்:—தேன்பிடிக்கும் தண்துழாய்ச் செங் கண் கருமுகிலை மான் பிடிக்கச் சொன்ன மயிலேபோல், புதுமழலைச் சொல் கிள்ளை வாயாள் (நளனை) தொழுது, பொன்புள்ளைப் பற்றித்தா என்றாள்."

பதவுரை.

தேன் - வண்டுகள்
பிடிக்கும் - மொய்க்கின்ற
தண் - குளிர்ச்சி பொருந்திய
துழாய் - துளசிமாலையை அணிந்ததும்
செம் - சிவந்த
கண் - கண்களையுடையதும் ஆன ஒரு
கரு - கருமையான
முகிலை - மேகம்போன்ற இராமனை
மான்-(மாயமாய்வந்த மாரீசனாகிய பொன்) மானை
பிடிக்க - பிடித்துத்தா
சொன்ன - ஏவிய
மயிலேபோல் - மயில்போன்ற சீதையையேபோல்,
புது - (கேட்குந்தோறும்) புதிய (இன்பத்தை அளிக்கின்ற)
மழலை - மழலையாகிய
சொல் - மொழிகளையுடைய
கிள்ளை - கிளியைப்போன்ற
வாயாள்-(மொழிமிழற்றும்) வாயுடைய தமயந்தியும்
தொழுது - (நளனை) வணங்கி
தான் - அவள்
பிடிக்க - கையில் வைத்து விளையாட
"பொன் - பொன்னிறமமைந்த
புள்ளை - அந்தப் பறவையை
பற்றி - பிடித்து
தா - கொடு"
என்றாள் - என்று வேண்டினள்.

விளக்கம்:—மயிலேபோல் வாயாளும் புள்ளைப் பற்றித் தா என்றாள், எனத் தொடர்ந்து முடித்துக் கொள்க.

விரிவுரை:—'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்னும் மூதுரை இருந்தால்தான் என்ன! இப்படியுமா தமயந்தி நடந்துகொள்வாள், என்னும் சந்தேகம் தோன்றலாம். முன்னேரிடத்தில் (84-வது செய்யுள், 881-வது பக்கம்) "பிள்ளைமீன் புள்ளரிக்குமாடன் திருமடந்தை" என்ற தமயந்தியைக் கவி அழைத்தபோது, அதனில்

உன்னுறை உவமமாய் அவன் கபடுருதொன்று மறியாப் பேதை என்னும் குறிப்பு அடங்கி யிருக்கின்றதென்று காட்டினேம். அதற்கு ஆதாரமாக இப்பொழுது இச்செய்தி நிகழ்கின்றது. விதர்ப்பவேந்தனும் வீமராஜனுக்கு ஒருமகளாய்ப் பிறந்து நிடதர்தம் கோமான் நளனை மணந்து வாழ்ந்த இவள், செல்வமும் சுகமும் எல்லாம் இழந்து நடை மெலிந்து ஏழையாய்க் காடடைந் திருப்பதுமல்லாமல் உயிரிற்கு உயிராய இருமக்களையும் பிரிந்த துயர் புதுப்புண்ணுயிருக்கும் இந்த நிலையில், தான் வைத்து விளையாட ஒரு பறவையைப் பிடித்துத் தாச் சொன்னளென்றால், இது இயற்கையாமோ, பேதைக் குணம் இதனினும் பெரியதுண்டோ, என்று யாவரும் சந்தேகம் கொள்ளலாம். புகழேந்திப் புலவருக்கும் இந்தச் சந்தேகம் பிறந்தது. இனி, இயற்கைக்கு மாறுகி உலகமலைவாய் நிற்கின்ற ஒன்றைத்தான் எழுதிவைத்தார் என்று எவரேனும் எண்ணி வியத்தலும்கூடும் என இவர் அஞ்சவும் அஞ்சினார்போலும். ஆகையாற்றான் சற்றேறக் குறைய தமயந்தியின் நிலையிலேயே இருந்த சீதாபிராட்டியும் பஞ்சவடியில் தன் நாயகனைக்கொண்டு ஒரு மானைப் பிடித்துத் தாச் சொன்ன செய்தியை இங்கு நம் நினைவிற்கு வருவித்து அமைத்து காட்டுகின்றார் என்று எண்ண இடமுளது. "சீதை மான் பிடித்துத் தாச் சொன்னது இயற்கைக்கு விரோதம் அல்லவென்று ஏற்பீர்களாயின், தமயந்தி புள் பிடித்துத் தாச் சொன்னள் என்று இங்கு நான் கூறுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியவரா யிருக்கின்றீர். அதைத் தள்ளினால் இதையும் தள்ளிவிடுங்கள்" என்று நம்மோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்கின்றவர்போல் இந்த உவமை வந்து நிற்கின்றது.

குறிப்பு:— (1) உம், என்பது ஒரு இடைச்சொல் என்றும், அது ஓகாரம் ஏகாரம் போன்ற மற்ற இடைச்சொற்களைப்போல் பெயர்ச் சொல்லோடும் வினைச்சொல்லோடும் சேர்ந்து பலபொருள்களைத்தரும் என்றும் முன் (489-வது பக்கத்தில்) சொல்லியிருக்கின்றோம். உம்மைக்கு இருக்கின்ற பொருள்களில் எச்சப் பொருளும் ஒன்று. இராமன் வந்தான், இலக்குமணனும் வந்தான் — இந்த வாக்கியத்தில் இலக்குமணனும் என்னும் பெயரிலுள்ள உம்மை, இராமன்மாத்திரம் வந்திருந்த எச்சத்தை (அதாவது குறையை) இலக்குமணனும்வந்து இறந்தகாலத்திலேயே தீர்த்தான் என்ற பொருள் தோன்றுவதால், அதனை இறந்தது தழீஇய எச்ச உம்மை என்பர். இராமன்வந்தான் இலக்குமணனும் வருவான்—என்பது வாக்கியமாயின், இராமன் வந்து இலக்குமணன் வாராதகுறை எதிர்காலத்தில் நீங்குமாகையால், இதனை எதிரதுதழீஇய எச்ச உம்மை என்பர்.

வேற்றுமை உருபுகள் தொக்கியிருக்கலாம், விரிந்தும் இருக்கலாம்; பொருளையே முக்கியமாக நோக்கவேண்டும் என்று சொன்னேமல்லவா. அதுபோலவே, இடைச்சொற்களும் சிலபோது மறைந்திருந்து தம் பொருளைத் தரும். இந்தச் செய்யுளில் வாயாள் என்ற பதத்தோடு உம் சேர்ந்திருக்கவேண்டும். இராமனை மான்பிடித்துத் தாச்சொன்னள் சீதை. அவளைப்போல் தமயந்தியும் நளனைப் புள்பிடித்துத் தாச்சொன்னள் என்பது கருத்து. ஆகையால் தமயந்தியைக் குறிக்க வருகின்ற வாயாள் என்னும் பதத்தின் கடைசியில் உம் என்னும் இடைச்சொல் இறந்ததுதழீஇய எச்சப்பொருளில் மறைந்திருப்பதாக வைத்துக்கொள்ள வேண்டும். சீதை கேட்டாள், தமயந்தியும் கேட்டாள், என்று என்னுவதுதான் மனதிற்கு இயற்கையாக அமையும்.

(1) முகில், மயில், என்பன உவமை ஆகுபெயர்கள், முகில்போன்ற இராமனையும், மயில்போன்ற சீதையையும், உணர்த்துகின்றன.

(3) இந்தச் செய்யுளில் வந்திருக்கின்ற இரண்டாம் வேற்றுமைப் பெயர்களை எடுத்து அவை தொகையா விரியா, உருபும் பயனும் உடன்தொக்க தொகையா, என்று பார்ப்போம்:—

துழாய்:—துழாய்ச் செங்கண் கருமுகிலை, என்றதற்கு அர்த்தம், "துழாயை அணிந்த சிவந்த கண்களை உடைய கரியமுகிலை" என்பது ஆகும். எனவே 'துழாய்ச் செங்கண்' என்பதில் ஐ என்னும் உருபும் அணிந்த என்னும் பயனும் மறைந்திருப்பதால், இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

கண்:—இதுவும் கண்களை உடைய மேகம், என்று ஆவதால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

முகிலை:—இரண்டாம் வேற்றுமை விரி. ஐ உருபு தெரிந்து நிற்கின்றது.

மான் பிடிக்க:— மானைப் பிடிக்க, என்று ஆகுமாகையால் இரண்டாம் வேற்றுமைத் தொகை. வேற்றுமை உருபு தவிர அர்த்தம் பூர்த்தியாவதற்கு வேறு ஒருசொல்லும் தொக்கி யிருக்கவில்லை யல்லவா?

மயிலே போல்:—மயிலையே போல், என்று ஐ, உருபுமாத்திரம் மறைந்திருப்பதால் இரண்டாம் வேற்றுமைத் தொகை.

புள்ளை:—இரண்டாம் வேற்றுமை விரி, புள்+ஐ.

சொல்கிள்ளை:— சொல்களைப் பேசுகின்ற கிளி, என்று ஐ உருபும் பேசுகின்ற என்னும் பயனும் மறைந்திருப்பதால், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

பொற்புள் ளதனைப் பிடிப்பானளன் புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல விருந்தது கண் டன்றே
விளைக்குமா றெண்ணினன் மன். 80.

பதப்பிரிவு: —பொன் புள் அதனை பிடிப்பான் நளன் புகுத கைக்கு உள் வரும் ஆபோல் கழன்று ஓடிஎய்க்கும் இளைக்கும் ஆ போல இருந்தது கண்டு அன்றே விளைக்கும் ஆறு எண்ணினன் மன்.

பதவுரை.

நளன் - நளனுனவன்
பொன் - பொன்நிறமமைந்த
புள் - பறவையாகிய
அதனை - அதை
பிடிப்பான் - (தமயந்தி வேண்டிக் கொண்டபடி) பிடிக்க
புகுத - ஆரம்பிக்க (அப்பொழுது அது)
கைக்குஉள் - (அவன்) கையில்
வரும் ஆ போல் - (பிடிபட) வருவதைப்போல் (பாசாங்கு செய்து அவன் சமீபத்தில் வந்தவுடன்)
கழன்று - விலகி
ஓடி - ஓடிப்போய்
எய்க்கும் - சோர்ந்து கிடக்கும்.
இளைக்கும் ஆ போல் - (இப்படி இது) சோர்ந்ததைப் போல
இருந்தது - இருந்ததை
மன் - அரசன்



கண்டு - பார்த்து
அன்றே - அப்பொழுதே
விளைக்கும் - (அதை) விளைத்துக் கொள்ளும்
ஆறு - வகையை
எண்ணினன் - நினைத்தான்.

விரிவுரை:—புள்வடிவமாய் வந்திருந்த கலிபுருடன் நளன் கையில் அகப்படுவதுபோல நடிப்பதும் அகப்படாமல் வஞ்சித்து அகன்று விடுவதுமான அவளைச் சிறிது நேரம் ஆட்டங் கண்டு பிறகு களைத்துப் போய் விட்டது போல் ஒரு பக்கமாக இருந்தது. இதுதான் சமயம் என்று நளன் அதைப் பிடித்துவிட எண்ணினான்.

குறிப்பு:— (1) பிடிப்பான்:—வினையெச்சம்; பிடிக்க என்று சாதாரணமாய்ச் சொல்வோம். புகுத என்னும் இன்னொரு வினை யெச்சத்தைக்கொண்டு முடிகின்றது.

(2) இருந்தது:—வினையாலணையும் பெயர். இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(3) வரும் ஆ போல், இளைக்கும் ஆ போல, என்ற இடங்களில் வந்திருக்கின்ற ஆ என்பதே வார்த்தை அல்ல. ஆறு, என்பதுதான் வார்த்தை. வரும் ஆறு போல், இளைக்கும் ஆறு போல, என இருத்தல் வேண்டும். ஆறு, என்றால் வழி, விதம், என்பது அர்த்தம். அவ்வாறு செய்தான், இவ்வாறு பேசினான், என்ற உதாரணங்களில் ஆறு என்னும் சொல் அவ்விதம் இவ்விதம் என, விதம் என்னும் பொருள் தருவதைக் காண்க. வரும் ஆறுபோல் - வருகின்ற விதத்தைப்போல் - வருவதைப்போல்: இளைக்கும் ஆறுபோல - இளைக்கின்ற விதத்தைப்போல - இளைப்பதைப்போல, எனவே, ஆறு என்று இருக்கவேண்டிய சொல், று, என்ற ஈற்றெழுத்தை மறைத்து ஆ என்றுமட்டும் நின்றது. இப்படி ஒரு வார்த்தையில் இருக்கவேண்டிய எழுத்துக் குறைந்து செய்யுளில் வருகின்ற வழக்கமுண்டு. ஆறு, என்பதில் ஈற்றெழுத்தாகிய று தொகுத்தலால் ஆ என்று அது நிற்கக் காண்கிறோம்.

முன், நாற்குணமும் நாற்படை ஆ, ஐம்புலனும் நல் அமைச்சு ஆ, என்று (21-வது செய்யுள், 129-வது பக்கம்) முன்வந்த செய்யுளில் ஆ என்பது ஆக என்னும் சொல்லின் ஈற்றெழுத்தாகிய க, தொக்கதனல் அவ்வாறு நின்றது.

கொற்றக் கயற்கட் கொடியே யிருவோரும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோ மென்று
பற்றகலா வுள்ளம் பரிந்து. [ரைத்தான் 81.

இப்படிச் சோர்வடைந் திருப்பதுபோல் பாவித்த பறவையை எதனால் பிடிப்பதென்று யோசித்த நளன், தானும் தமயந்தியும் ஒரே துணியின் இரண்டு தலைப்பையும் இருவரும் சுற்றிக்கொண்டு மற்ற ஆடையை மெள்ளக் கொண்டுபோய் அந்தப் புள்ளின்மேல் போட்டுப் பிடித்துவிடலாம் என்று நிச்சயித்து, அவளுக்கு அந்த யுக்தியைக் கூறினான் என்பதை இச்செய்யுள் கூறுகின்றது.

பொழிப்புரை:—"கயல் போன்ற கண்களையுடையவளாய் மன்மதனின் வெற்றிக்கொடி போன்றவளே, நாம் இருவரும் ஒரு துணியை ஆடையாக அணிந்து கொண்டு, மற்ற இந்த அழகிய வஸ்திரத்தினால் பக்ஷியைப் பிடிக்கப் போவோம் வா," என்று நீங்காத ஆசையால் அவள்பால் மனமிரங்கி நளன் செப்பினான்.

# கம்ப ராமாயணம்.

## பாலகாண்டம்

## 7. தாடகை வதைப் படலம்.

(727-ம் பக்கத் தொடர்ச்சி.)

(8902)

நாடகம் நிகழத் தாடகை தாழ்வளோ!

வான்மீகி மகாமுனிவர் வகுத்துவைத்த வழிநின்று அங்கங்கு இறையிறை விலகுவதும் பிறகு தொடர்ந்திசைப்பதுமாய் இராமசரிதத்தைப் பாடுகின்ற கம்பர், போர் தொடங்கும்வரை, தாடகைவதச் செய்தியில் பெரும்பான்மை வடமொழி நூலையே பின்பற்றியுள்ளார். அரக்கி அவளாயினும் பெண்ணுருத் தாங்கிய தாடகையைக் கொல்வது முறையோவென இராமன் அயிர்ப்பதும், அதற்குக் கோசிகன் அமைதிகூறுவதும், இவ்விரு பெருங் காவியங்களிலும் ஒக்கவே நிகழ்ந்திருக்கின்றன. எனினும் அவ்வமைதியைக் கோசிகன் கூறுமிடத்தையும், தாடகையைக் களத்தினுள் வருவிக்குமாற்றையும் நோக்குங்கால் இந்நூல்களுக்கிடையே ஒருசிறிது வேறுபாடு தோன்றுகின்றது. இவ்வேற்றுமையும் அது விளைந்த காரணமும் கருதியபின் ஒற்றுமையைப் பாராட்டல் பயனுடைத்தாம்.

கதையின் முறையானே நடந்தனவற்றை நவின்று வருபவர் வான்மீகி முனிவரென்றும், மொழியெனும் களத்தினுள் நாடகக்காட்சியைக் கம்பர் நல்கவும் செய்துளார் என்றும் முன்னேரிடத்திற் செப்பியுள்ளோம். அதன்படி வான்மீகி முனிவர், விச்வாமித்திரனோடு அயோத்தி புத்திரர்கள் கொடியதோர் வனத்தை நண்ணியதும், அதனைக் கண்ணுற்ற இராமன் 'யாவது ஈது' என வினவியதும், அதற்குக் கோசிகன் அங்கு வசித்த தாடகையின் வலிமை கொடுமை உருவம் முதலியவற்றை இயம்புவதும் ஆகத் தன்கதையைத் தொடர்ந்து போகின்றார். கம்பரும் இதுமட்டும் அவரோடு இணங்கிவரக்காண்கின்றோம். ஆனால், வான்மீகத்தில் இவைகளைக் கூறிய கோசிகன்,

அவளிப்பொழுது நமக்கு அரையோஜனை தூரத்தில் நமது வழியை மறைக்கப் போகின்றாள். நாமும் அவளிருக்கும் காட்டு வழியாகத்தான் அவசியம் போகவேண்டும். அந்தத் தீய செய்கையுள்ள ராக்ஷஸியை உன் புஜ பலத்தால் நீதான் வதைக்க வேண்டும். இதுதான் நான் உனக்கு முதலில் இடும் கட்டளை. இதைச் செய்து அந்த அரணியத்தின் பயத்தை நீ முதலில் வேரோடு களைய வேண்டும். அவள் இங்கு இருக்கிறாள் என்ற பயத்தால் இவ்விடத்தில் ஒரு பிராணியும் வருகிறதில்லை. அவள் கொடுமை இதுவரையில் ஒரு நிமிஷமாவது குறையவில்லை. என் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன்."

என முன்னதாகவே தாடகையைக் கொல்லுமாறு இராமனுக்குக் கட்டளை இட்டுவைக்க நேர்கின்றது. கொல்

# மதிப்புரை.

## திருக்குறட் குமரேச வெண்பா

மூலமும் - உரையும்

ஆசிரியர்:—ஜகவீர பாண்டியன்,

திருவள்ளுவர் நிலையம்

ஊத்துக்குடி.

(737 - வது பக்கத் தொடர்ச்சி)

தத்துவப் பொருள்கள் யாவும் ஆதியந்த மற்றன. உள்ளுவா ருள்ளும்வண்ண முண்மையைத் தோற்றுவிக்குந் திறமு மவைகளுக் குளது. தத்துவங்களைச் செப்புதற் கதுவலால் தரம்பிறி தொன்றிற் கில்லை. உதாரணங்கள் ஒரோவழி, தத்துவங்களின் ஒவ்வோ ரம்சங்களை விளக்குகின்ற உதவி புரியுமெனினும், இவ்வுதவிக்கு எதிர்வினையாய் அத்தத்துவங்களது அகலத்தின் ஒரு பாகத்தை வாங்கிக் கொண்டு விடுதலுங் கூடும். அதுவுமன்றி, உதாரணங்களையும் உவமைகளையும் மிகமிக ஆய்ந்து அமைப்பினும், அந்தத்தில் அவை யேகதேசமாகத்தான் பொருந்த இயலுமே யல்லாது, உவமிக்கப்பட்ட பொருள்களின் முழுத்தன்மையையும் அங்கத்திற் கங்கம் நேர்நேராக ஒவ்வி நிற்க ஒண்ணு தென்பது யாவரு மறிந்ததே. புலன்கள் ஐந்தும் ஒரு பொருளைப் பகுத்து ஒவ்வோர் அம்சத்தையே உணர்தற்கமைந்தனவாதலால் இப்புலனுணர்விற்கு ஏற்றவைகளை உவமையாலும் உதாரணங்களாலும் உரைக்கப் புகுவதால் பழுது நேர்ந்திடாது. ஏனெனில் ஒரு பொருளைப் புலனுக்க முயலுந்தோறும் நாம் அதன் ஒவ்வோர் தன்மையையேனும் உறுப்பையேனும் நிலையையேனும் சார்ந்தே சந்தர்ப்பப்படுத்துகின்றோ மாதலால் அப்பொருளின் முழுமைக்கும் ஏற்ற உவமையும் உதாரணமும் வேண்டுமென்கிற அவசியமில்லை. வேண்டிய அம்சத்தை மாத்திரம் புலனுட்கொண்டு மற்றவைகளை அப்போது மறந்து நிற்றல் நேரிதேயாகும். தத்துவங்களோ புத்தியா லுய்த்துணர்ந் தனுபவிக்க வேண்டியன. உண்மையில் அரையுண்மை காலுண்மை யென்னுங் கூறுபாடில்லை யாகையால் அதனை உட்கொள்ளும் மனமும், ஆராயும் புத்தியும் முழுவதும் கொண்டாலன்றி யாதும் கொண்டதாகக் கருதப்படமாட்டா. ஆதலால், கூறுபாடற்ற தத்துவப் பொருள்களின் முழுத் தன்மையை, ஒன்றொன்றே குறிக்கு மியல்புடைய உதாரணங்கள் புகுந்து சிதைத்துவைப்பது மாகுமென்பது வியப்பன்று.

கல்வியும் அதன்பெருமையும் சுவை யொளி யூறோசை நாற்றத்துள் அடங்கியவைகளல்ல. குலம் செல்வம் அனைய நலங்களால் எய்தும் பெருமை கல்வியால் விளையும் பெருமைக்கு ஈடாகாதென்னும் உண்மையைத் தெரிவிக்கும் வள்ளுவனர்

> "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
> கற்றா ரனைத்திலர் பாடு"

என்று விளம்பினர். இதற்கு உதாரணம் வேண்டியதில்லை. உலகவாழ்க்கையில் நாம் தனித்தனி கண்ட சம்பவங்களைத் தொகுத் துரைக்கும் வாக்கியமிது. இனி மீண்டு மிதனை உதாரணத்தால் வகுக்கப் பார்க்கின்ற காலையில் முழுமை இழப்பதால் இன்றியமையா தெழுகின்ற வழுவை யாவர்க்கும் காத்தலருமை. நமது ஆசிரியர் ஜகவீர பாண்டியன் இக்குறளை அமைத்து,

> எத்துபுகழ் மன்னரினும் ஏற்றமுற்றார் கற்றவொட்டக்
> கூத்தனார் என்னே குமரேசா—எத்தகின்ற
> மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
> கற்றா ரனைத்திலர் பாடு.

என்று பாடியுள்ள செய்யுளை ஆராயின் முன்னிங்கு நாம் கூறியன விளங்கும். இவ்வுதாரணம் பொருந்துவதற்கு முதலில் குலோத்துங்க சோழனைக் கல்லாதான் ஆக்கல்வேண்டும். அவன் கல்லாதான் அல்லன். கற்றவனுயிருந்ததாற்றான் ஒட்டக்கூத்தனை நன்கு மதித்துப் பாராட்டினன். ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைக் குலோத்துங்கன் சூடியது, ஒன்றிற்குதாரணமா யமையக் கூடுமெனின், கற்றாரைக் கற்றாரே காமுறுதற் காகுமேயல்லாது, உயர்குலத்திற் பிறந்தும் கல்லாத வொருவன் கீழ்ப்பிறந்தும் கற்றவனுக்குத் தாழ்ந்ததற் கமையாது. மேலும்,மேற்பிறந்தும் கல்லாதிருப்பரேல் அவர், கீழ்ப்பிறந்தும் கற்றவர்க்கு நிகராகார் என்பதுவே வள்ளுவர் கருத்தாயிருக்க, நமது ஆசிரியர் காட்டும் உதாரணம், கீழ்ப்பிறந்து கற்றவன் மேற்பிறந்து கற்றவனுக்கும் மேலான பெருமையை உடையவன் என்ற குறிப்பையல்லவோ கொண்டிருக்கின்றது. கல்லாமைக்குத் தாழ்மைகூறினரே யன்றி வள்ளுவர் உயர்குலத்தில் பிறத்தற்கே எப்படியும் இழிவுண்டு என்று இயம்பினரல்லர். 'கல்வியோடு குலமும் சேர்ந்தால், அக்கல்வியால் அடையும் பெருமை ஒரு படி தாழ்ந்துவிடும்' என்று எண்ணும் இவ்வுதாரணம் இத் திருக்குறளின் பொருளை மயங்கச் செய்கின்றது.

வாய்மையே நோக்கின், முன்னர் நாம் கூறியபடி உதாரணத்தின் செய்தியே இத்தகையதாதலால் இம் மயக்கத்தை முன்னிட்டு ஆசிரியரது ஆராய்ச்சி அறிவை நாம் அயிர்க்கவில்லை. வள்ளுவனாயனர் தாம் கூறும் பொருளிற்கு உதாரணம் அமைத்துப் பாடிய குறள் ஒன்றே நம் நினைவிற்கிப்பொழுது வருகின்றது. வேறு இல்லை என்றும் எண்ணுகின்றோம். அதுவும்,

> ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங் கரி.

என்பதாம். ஐயந்திரிபற யாவரும் உணருமாறு தன் குறளிற்கு உதாரணம் அமைக்குந்திறம் திருவள்ளுவர்க்கே இல்லாது போயிற்றென்று எவர் செப்புவார்! ஆயினும், இந்திரன் ஐந்தவித்தா னாற்றலுக்கு எவ்வகையிற் கரியாய் நிற்கின்றான் என்று உணர்தல் எளியதன்று. "மகம்பல இயற்றினவனும் வானவர்க்கிறைவனும், வஜ்ஜிராத்தாயுதம் உடையவனும் ஆகிய இந்திரனையும் ஐந்தவித்த கௌதமர் நொடிப் பொழுதில் சபித்துவிட்டார். ஆதலால், ஐந்தவிற்றான் ஆற்றலை இதனிற்காண்' என்று வள்ளுவர், சபிக்கும் வன்மையை ஒரு ஆற்றலாகப் பாராட்டினர் என எண்ணலாமோ? சாபமிட வேண்டியகாலையும் கூடியஇடத்தும் சபிக்காதிருத்தலே நீத்தார் பெருமையாம். அவ்வாறிருக்கப் பரிமேலழகர், "தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினனாகலின், 'இந்திரனே சாலுங்கரி' யென்றார்" என்று கொள்ளலாயிற்று. 'ஐந்தவித்தான் ஆற்றல்' என்ற தொடரோடு இந்திரனைச் சேர்த்தவுடன், கோதமன் அவனுக்கு இட்ட சாபம் நினைவிற்கு வருவது இயற்கையே. ஆதலால், சாபம் இடும் வன்மையை நீத்தார்க்குரிய ஆற்றலென மதித்துத் திருவள்ளுவர் கூறினரென்று பரிமேலழகரும் என்னலாயினர். இவ் 'வெண்ணம் அவர் மனதில் நிலவியதாதலால் இந்த அதிகாரத்தில் வரும் பிற குறள்களும் அந்த வர்ணத்தால் கதுவப்பெற்று உரைகண்டன. "நிறைமொழி யென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மொழி" என்பர். இதுவுமல்லாமல்,



> குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயுங் காத்த லரிது.

என்ற குறளிற்கு, "முனிவரது வெகுளியை வெகுளப் பட்டாரால் தடுத்தல் அரிது", என்று உரைகூறி, "முனிவர் வெகுண்டால் அவ்வெகுளிக்கு ஆளாயினோர் அக்கணமே தடுக்க இயலாது அழிந்திடுவார்" என்னும் கருத்தோடு, முன் சபிக்கும்ஆற்றலால் நீத்தார்க்குப் பெருமை நல்கியதுபோன்றே இங்கு அவர் வெகுளியின் வன்மையால் பெருமை புகட்டுகின்றனர் பரிமேலழகர். பெருமைக்கு விரோதமான வெகுளியையும், அவ்வெகுளியை முன்னிட்டு எழும் சாபத்தையும் திருவள்ளுவர் நீத்தாரது பெருமையுள் வைத்துப் பேசினரென்று பரிமேலழகர் உரைகாண நேர்ந்தற்குக் காரணம் இந்திரனைக் கரியாய் அழைத்ததே என நினைக்கின்றோம்.

மணக்குடவர், ஐந்தவித்தா னாற்றலிற்கு இந்திரன் கூறும் கரி வேறாகக் கொள்கின்றார். "இந்திரன் சான்றென்றது; இவ்வுலகின்கண் மிகத் தவஞ் செய்வாருளராஜல் அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியனென்றது" என்பதால் இவர் சாபமிடும் ஆற்றலை ஆற்றலாக நீத்தார்பால் பாராட்டவில்லை. ஆதலாற்றான், 'நிறைமொழி மாந்தர்' என்பதற்கு, 'நிரம்பிய கல்வியையுடைய மாந்தர்' என்றே பொருள் கூறினர். ஆயினும் என்! உதாரணமாக வந்த இந்திரன் இவர் மனத்திலும் ஒரு மூலையில் அவன் சாபமுண்டதை இட்டுவைத்துப் பரிமேலழகர்க்கு விளைவித்த மயக்கத்தை ஒரு சிறிது இவருக்கும் உண்டாக்கி வைக்காமல் அகன்றிலன். இல்லையெனில் மணக்குடவரும், 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது' என்னும் குறளிற்குப் பரிமேலழகரைப்போலவே, "குணமாகிய மலையை மேற்கொண்டு நின்றார்மாட்டு உளதாகிய வெகுளியால் வருந் தீமையைச் சிறிது பொழுதாயினும் வாராமற் காத்தலரிது. நகுஷன் பெரும் பாம்பாயினன். இது வெகுளி பொறுத்த லரிதென்றது" என்று நீத்தார் பெருமைக்கு அவர் கோபத்தைக் குறியாக்கி நகுஷனையும் எடுத்துக் காட்ட இசைந்திரார்.

ஆயின், நீத்தார் பெருமைக்கு ஒக்க இக்குறள்களுக்குப் பொருள்கூற இயலுமோவெனின், இயலுமென்றே எண்ணுகின்றோம்.

ஒன்று இல்லாதான் சிறுமையைக் காட்டுமுகத்தானே அஃதுள்ளவனது பெருமையை விளக்கியதுமாகும். கற்றோர் பெருமைக்குக் கல்லாதார் பூண்ட கயமையே சான்றெனச் செப்புதல் போல், வேள்விப்பயனும் செல்வச் சிறப்பும் வீரமும் ஆட்சித்திறனும் யாவும் இந்திரன் பெற்றிருந்தானயினும், ஐந்தவித்தில னாதலால், தான் பெற்றவை பேற்றினைப் போற்றிக்கொள்ளும் ஆற்றல் இலன் ஆயினன்; நற்பொருளை ஈட்டுதலன்றி நந்தாது போற்றும் ஆற்றலும் ஐந்தவித்தார் மாட்டே உளது, என்னுங் கருத்துமட்டுமே "ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசம்பு ளார்கோமான்—இந்திரனே சாலுங் கரி," என்ற குறளில் அடங்கியிருக்கின்றதெனக் கொள்வதே நீத்தார் பெருமைக்கு நேர்மையா யமையும். பரிமேலழகரும் இப்பொருளேதான் கண்டுள்ளார் என்னும்படி, "தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவனது ஆற்றல் உணர்த்தினனாகலின், 'இந்திரனே சாலுங்கரி' யென்றார்" என்றுரைத்த வாக்கியம் நாமுரைத்த கருத்திற்கும் பொருந்தி யிருக்கின்றது. "ஐந்தவியாதவனது வன்மைக்குச் சான்றாக இந்திரன் வந்தானே யல்லாது அவித்தவனுக்குள்ள சபிக்கும் ஆற்றலிற்கு ஆளாக வந்திலன்." என்னும் பொருளை எம்மோ டிணங்கிப் பரிமேலழகரது வாசகமும் நல்குகின்றதெனினும், அவ்வுரையாசிரியர் பின்வரும் 'நிறைமொழி மாந்தர்' என்ற தொடரிற்கும், "குண மென்னுங் குன்றேறி நின்றார்" எனத் தொடங்கும் குறளிற்கும் உரை கூறுமிடத்தே நீத்தாரது சாபத்தையும் கோபத்தையும் முறையே ஆற்றலாகப் பாராட்டிய பொருள் கூறுவதால் அவர், கோதமனையேனும் அகத்தியனையேனும் மனதிற்கொண்டே அவ்வாசகம் விளம்பினரென ஐயமெய்தத் துணிந்தோம்.

ஆயின், பரிமேலழகரும் மணக்குடவரும் உரைத்தபடியல்லாது வேறுபொருள்,

> குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயுங் காத்த லரிது

என்னும் குறளிற்கு உரைக்க இயல்வதாயிருத்தல் வேண்டுமேயெனின், இயலும். நின்றார், என்பதை ஆறாம்வேற்றுமை யாகவும் ஏழாம்வேற்றுமை யாகவும் கொள்ளாது வினைமுதலாகக் கொண்டு, காத்தல் என்பதற்குத் தடுத்தல் அல்லது தாங்குதல் என்னாது போற்றல் அல்லது தங்குதல் என்ற பொருளை ஏற்றால், இந்தக் குறள் நாம் திருவள்ளுவரது கருத்தென்று நினைப்பதற்கொக்க உரைகொள்ளும். அப்பொழுது "நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற முனிவர்(வெகுளியுற்றாரெனினும்) தம் வெகுளியைக் கணநோமேனும் மனதிற் தாங்கியிரார். தோன்றிய மாத்திரையிலேயே அவ்வெகுளி அகலும்" என்று பொருள்பட்டு நீத்தார்க்குரிய நிசப்பெருமையை அவர்க்களிக்கும். ('நிலங்காத்தான்,' 'நீர்காத்த கடல்,' என்னும் வழக்குகளில் காத்தல் என்பது இப்பொருளில் வருவதை யாவரும் அறிவர்)

யாம்கூறும் இப்பொருள் உரியதாகும் என்பதற்கு ஆதாரம் சிலவுள. சிவப்பிரகாச சுவாமிகள் பரிமேலழகரது உரையையும் மணக்குடவர் உரையையும் உடன்பாடின்றி மறுத்துவைக்க நினைத்தவர்போல்,

> உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
> கொள்ளுங் குணமே குணமெனக—வெள்ளந்
> தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
> விடுத லரிதோ விளம்பு,

என்று இடித்துரைத்துப் பாடிய செய்யுள் மறக்கற்பாலதன்று. மணக்குடவருக்கும் பரிமேலழகருக்கும் இவ்வதிகாரத்தின் குறள்களை அமைக்கும் வரிசையில் மாறுபாடுளது. மணக்குடவர், "குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்னுமிக் குறளை ஏழாவதாக்கி அதன்பின் "செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்—செயற்கரிய செய்க லாதார்" என்ற குறளை அமைத்தார். "நன்னெறியின்" ஆசிரியர் இவ்விரண்டு குறள்களையும் உட்கொண்டு, குணமிது அருமையிது என்று விளக்குதற்கே இப்பாசுரம் பாடினரென்பதற் கையமின்று.

திருத்தக்கதேவர், இந்தக் குறளை மனதில் நினைத்து அதன் கருத்தை உவமையாக உபயோகப் படுத்துமிடத்து, நீத்தார் வெகுளி நில்லாதகலு மென்றே குறிக்கின்ற,

> நிலையிலா வுலகி னின்றவண் புகழை
> வேட்டவ னிதியமே போன்றும்
> இலைகுலாம் பைம்பூ ணிளமுலைத் தாதி
> னின்கனித் தொண்டையர் துவர்வாய்க்

கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றுங்
கடவுளர் வெகுளியே போன்றும்
உலைவிலார் நில்லா தொருபக லுள்ளே
யுருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார்

என்று வருத்துள சிந்தாமணிச் செய்யுளும் கருதத் தக்கது. 'கடவுளர் வெகுளியே போன்றும்' என்றதற்கு நச்சினார்க்கினியர், 'இருடிகள் கோபம் போமாறு போலேயும்' என்று உரைபகர்வர்.

சிவப்பிரகாச சுவாமிகள் நேராகவும், உவமையாகத் திருத்தக்கதேவரும் தாங்கொணு வெகுளியைப் பாராட்டாமல் அது தங்கி நில்லாமையே நீத்தார்க்கு உரித்தாய் நினைத்தாரெனின்,கம்பர்பிரான் சிலேடையாக இக்குறட்கு இக் கருத்தே காட்டுமாறு அமைந்துள்ளதாய்,

தூய முற்றிய காரி ருட்பகை
துன்னி யோடிட வுன்னெழும்
தீப முற்றவு நீர்த்த கன்றன
சேய தாருயிர் தேய்தலால்
பாப முற்றிய பேதை செய்தப
கைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றிமி கச்சி வந்தன
னுைத்த னன்குணக் குன்றிலே

என்று பாடியுள்ள ஓர் செய்யுள் அவர் நூலில் தோன்றி நிற்கின்றது. சிலேடையாய்க் குணமென்னுங் குன்றேறி நின்றான் வெய்யோன் கோபமுற்றி மிகச் சிவந்தனனாயினும், யாருக்கும் ஓர் தீமை செய்யாது இனி ஓர் கணத்தினுள் வெளுத்து விடுவான் அன்றோ!

எமது நண்பர் சுகவனம் சிவப்பிரகாசர், திருக்குறள் ஒவ்வொன்றின் கருத்தையும் ஒவ்வோர் ஆசிரிய அடியில் அமைத்துச் சிறுமறை என்னும் பேரோடு எழுதிவரும் நூலின் ஒரு பகுதியை எழுத்துப் பிரதியாகவே எமது பார்வைக்கு அனுப்பி மதிப்புரை வரையுமாறு பணித்துள்ளார். அதனிலும், "ஐந்தவித்தானாற்றல்" என்னும் குறளிற்கு நேராக, "ஐந்தவித்தார்க்கு இந்திரன் சிறுவன்", என்றும், "குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்னுங் குறளிற்கு எதிராகக், "குணமலை வெகுளி கணமுநில் லாது" என்றுங் கூறப்பெற்றிருப்பதால் அவரும் அக்குறள்களுக்கு இங்கு நாம் உரைத்தபொருளே தக்கனவாகக் கொண்டுளார் என்றெண்ண இடமுளது.

தம் நூலிற்குத் திருவள்ளுவர் தாமே அமைத்தவோர் உதாரணம் இன்னவாறு உரையாசிரியர் தம்முள்ளும் மற்றவர்களும் வேறுவேறு பொருள்கொள்ளக் காரணமாய் நிற்கின்றதெனின், ஏனையோர், குறளின் உண்மையை விளக்குதற்கென்று ஆய்ந்துகாட்டும் உதாரணங்கள் நாயனாரின் கருத்தின் முழுமையையும் மயக்கமின்றி நாட்டுமெனல் அருமையென்பதற் கையமுண்டோ. முற்றிலும் இயலாதென்னும் எண்ணத்தால் கையற்று நிற்காமல் இயன்றவரையில் இயற்றுகின்ற முயற்சியை மேற்கொண்டு நிகழும் நமது ஆசிரியர் ஜகவீரபாண்டியன் வரைகின்ற 'திருக்குறட் குமரேச வெண்பா' பெருமைக் கிடனாய் யாவர்தம் நன்மதிப்பிற்கும் இலக்காய்க் கற்றோரால் போற்றுதற் குரியதாய் விளங்குகின்றதாதலால் அதனை யாம் மனமார வாழ்த்தி அதன் பயன் உலகெங்கும் பரவுமாறு மூவிரு முகத்தானைப் பராவுகின்றோம்.

## காந்திமதி என்னும்

# காந்தாரநாட்டுக் கட்டழகி.

(712-வது பக்கத் தொடர்ச்சி)

### 32. அடிகளும் கள்வரோ!

வரும் வருமென இரத்தினபுரி வாசிகள் வழிபார்த்திருந்த விஜயதசமித் திருநாளும் முன்னிரவு விடிதலோடும் வந்துற்றது. நகர மாந்தர் தத்தம் மனைகளையும் தெருக்களையும் பொதுமண்டபங்களையும் அணிதல் செய்வதிலேயே முன்னாள் மாலை முதல் முயன்றிருந்தாராதலால், கழிந்ததோ இரவென்றவர் கருதுமுன்னர்த் தோன்றிய ஞாயிறு தம்மைத் துயிலுணர்த்தற் கங்கெவரும் காத்திலர்.

புலரி வந்தெழுதலும் இல்லங்கள்தோறும் மங்கல வாத்தியங்கள் முழங்கின. பல்லியங்க ளிசைத்தனராய்ப் பலர் வீதிவாய் ஏகினர். ஆலயங்களிற் புரிவளைச் சங்கமேங்கின. வார்விசி முரசங்க ளெங்கும் பம்பி யார்த்தன. காலைப் பொழுது வளரவளர களிறொடு பிடிகளும் புரவித் தேர்களும் மறுகினிற் சென்றுவர லாயின. மாதரும் மைந்தரும் நன்னீராடிப் பொன்னுடை யணிந்து சிந்தூரமும் திருநீறும் திகழ்ந்திலங்கு நெற்றியராய்ப் பொலிந்தனர். சமையற்செய் அறைநின்று பணியாரப் பெருமணம் வீடெலாஞ்சூழ மனைவனர் சிறார் அவ்வறைக்கண் போக்குவரவு பெரிதும் கொள்ளலாயினர்.

தெருக்களில் ஆடவர் நடமாட்டம் அதிகமாயிற்று. எதிர்ந்தோரை யெல்லாம் இவர், "இன்று போரில் எவர் வெல்வர்?" என வினவுவதும், தாம் முன்கொண்ட கருத்திற்கு இணங்காத விடை வருமாயின் அது கூறினோன் யாதுமறியாப் பேதையெனச் சொல்லத்தகுமிடத்துச் சொல்வதும், சொல்ல ஒண்ணார்மாட்டுத் தம் மனத்துளே நினைத்துக் கொள்வதுமாய்க் குறித்த கருமமொன்றுஞ் செய்வதற்கு இலரேனும், விரைவுடன் வீடுவிட் டகன்றுபோவதும் வந்துசேர்வதுந் தந்தொழிலாகத் திரியலுற்றனர். சென்றுசென் றிவர் இங்ஙனம் மீண்டது, அன்று குன்றத் திருதிறத் தலைவர்கள் தம் வழிப்பகை தீர்தரத் தனிப்போர் புரிவதற்கு நிறுவிய களமே யாகும்.

குண்டிலினியின் புனல் மண்டும் கரையின் பாங்கர், சங்கர மண்டபத்திற் கெதிரேயுள்ளவொரு சமவெளியை இப்போரிற்குரிய இடமாகத் தேர்ந்தமைத் திருந்தனர். இதனிற்கு ஒருபுறத் தெல்லை குண்டிலினி நதியே. மற்ற மூன்று பக்கங்களிலும் கழிகளால் வேலி கோலி, அதற்கப்பால் சனங்களிருந்து பார்ப்பதற்கு அடுக்கடுக்காய் ஆதனங்கள் கட்டிவைத்திருந்தனர். இக்களத்தின் ஒருபுறத்தே வேந்தன் தன் உழையரோ டமர்ந்து பார்ப்பதற்கு அழகிய பந்தலொன்று அமைந்திருந்தது. இக்களத்தினில் காலைமுதல் இருதிறத்து வீரர்களும் வெவ்வேறு பாகங்களில் குழுமி மெய்ப்பயிற்சியும் படைப்பயிற்சியும் செய்துகொண் டிருந்தனர். இவர்களைச் சூழ்ந்துநின்று நோக்கிய நகரமாந்தர் எத்திறத்தோர் பயிற்சிச் சாகசங்களைக் காண நேர்ந்தனரோ அன்னவரே வெல்வரெனச் சாதிக்கத் தலைப்பட்டனர்.

வெயில் முற்றுமுன் வெம்போர் தொடங்குவரென அறிந்திருந்த சனங்கள் காலந் தாழ்வதற்குப் பொறுக்காதவராகிக் குழும்பவே எங்கெங்கும் முழக்கம் அதிகமாயிற்று. மன்னவன் இப்போர் வேண்டாவென இன்று காலை தடுத்துவிட்டான், என்று ஊகித்தார் சிலர். "போர் தொடங்கு முன்னரே மகேந்திரன் பொங்கத் தம்பொங்கோ பாடிவிட்டான், ஆதலால் இப்போர் இல்லாதொழிந்தது" என்றார் சிலர். இதனைக் கேட்டுக் கருணாகரர் வீட்டிலே இவனோடு பண்டைநாள் பழகியுள்ள அந்நகர மாந்தரிற் சிலர், "ஆம், ஆம், பழைய கந்தனே கந்தன். மகேந்திரன் ஆனல்மாத்திரம் வீரம் வந்து புகுந்துவிடுமோ!" என்று எள்ளி நகையாடினர். "அற்றன்று, காலமாருதர்தம் தலைவன் மகேந்திரனது இளமையைக் கண்டிரங்கிச் சாந்தமாயினான். இருவர்க்கும் நட்புண்டாயிற்று. இனிப்போரில்லை" எனச் சிலர் அறிந்தவர்போல் செப்பினர். இவ்வாறு சனங்கள் அறியாததையும் அறிய இயலாததையும் ஒருவர்க்கொருவர் உறவுறச் சொல்லிக்கொண் டிருந்தபோது, விச்வகேசரி மன்னன்வந்து இன்னும் இத்தனிப் போரைத் துவக்கிவைக்காததற்கு உண்மையான காரணம் யாதெனத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சங்கர மண்டபத்துள் செல்வோம்.

அங்கு, விச்வகேசரி வேந்தன் தனதறைவிட் டகலாமல் பள்ளியின்மீது உட்கார்ந்திருந்தான். அவனருகு ஓர் பீடமிசை அகிலாண்டேச்வர ஆசார்ய சுவாமிகள் யோசனையி லாழ்ந்தவராய் யாதும் இயம்பாது போர்க்களத்தில் குழுமியோரைப் பலகணி வழியாய்க் கண்ணுற்று நெட்டுயிர்ப்பு வீங்குவதும், இறைவனது நிலையை நோக்கி இரங்கி உயிர்ப்பதுமா யமைந்திருந்தார். இன்னவாறு இருந்தவர்தம் செவியில் இகல்கொண்ட இருதிறக் குன்றத்தலைவரும் தத்தம் வீரர்களுடன் காளமும் முரசும் ஆர்த்தெழக் களத்துட் புக்கவொலி எட்டியது. இவ்வொலி செவிப்பட்டதும் உரோமம் சிலிர்த்து உடல் குளிர்ந்த அரசனை மடாதிபதி நோக்கி, "வேந்தே, நினக்கிது ஒவ்வாதாயின் ஒழித்தற்கு யாதுகொல் தடை?" என வினவினன்.

"பெரும, என் செய்கேன்; என தெண்ணத்தின் வண்ணம் யாது மியங்குவதில்லையே. அரசன் நானாயினும் என்னையுஞ் சேர்த்து ஆள்பவன் வேறொருவன் ஆகிவிட்டான். என்னைச் சூத்திரப் பாவையெனல் ஒண்ணாது. அதற்கு உணர்ச்சியேனு மில்லாத நலமுளது..."

"சூத்திர மறுந்தாலும் இயங்குகின்ற ஆற்றல் நினக்கில்லையோ?"

"உளது உளது, அடிகாள் உளது. ஆயினும் வயதின் சுமையால் தளர்ந்திருக்கும் எனக்குப் பற்றுக்கோல் ஒன்று இன்றியமையாததாகின்றது. கோலென்று யான் ஊன்றிய யாவும் கயிறாய்க் கட்டி யிழுக்கத் தலைப்படுகின்றனவே"

"அரவினை எடுத்துக் கழியென்று பற்றினால், மற்று யாது செய்யும்."

"என்னுடன் பிறந்த விராடனை இச்சொல்லால் குறிக்கின்றீ ரென்ப துணர்வேன். ஆயினும், அவ்வரவிற்குத் துணைபுரியும் அடிகளையும் இவ்வசை மறித்து வந்து தாக்கலாம்."

T. N. சேஷாசலம்.


தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.



உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| அன்பு | 0 | 1 | பொதுமதம் | 0 | 2 |
| பலவகை மனிதர் | 0 | 1 | ஆரோக்யம் | 0 | 2 |
| தவம் | 0 | 1 | சந்தேகம் | 0 | 2 |
| பொறுமை | 0 | 1 | கற்பு | 0 | 3 |
| இருவினை | 0 | 2 | அஸ்தபூஷணம் | 0 | 4 |
| இல்லறம் | 0 | 2 | பதினாறுபேறு | 0 | 4 |
| ஆலயவழிபாடு | 0 | 2 | என் தந்தையார் | 0 | 6 |

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும்
ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு
ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.
தபால் சார்ஜ் இனாம்.
இன்றே எழுதுங்கள்!
நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

## கம்பராமாயணம்
## பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்பிரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

## ஏமாங்கதத்
## திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

# KAMBAN'S KOSALA
## or
## A Poet's Plea for Culture
## by T. N. Seshachalam B.A., B.L., In English

**A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.**

## With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "**KALANILAYAM**" 11, Vellala St., Purasawalkum, Madras.




# வர்த்தமானம்.

**காங்கிரஸ் நிதியைத் திருடியதற்காகத் தண்டனை:**—குஜராத்துக் காங்கிரஸ் கமிட்டியின் பொக்கிஷதாரர் காங்கிரஸ் நிதியில் 23,560 ரூபாய் திருடிவிட்டதற்காக இரண்டு வருஷக் கடுங்காவல் தண்டனையும் 1000ரூபாய் அபராதமும் விதிக்கப் பெற்றார் என்று ஆமதாபாத்துச் செய்தி கூறுகிறது.

***

**23 ஆயிரம் மைல் பறந்த விமானிகள் :**—நாலு பிரிட்டிஷ் ஆகாய விமானிகள் லண்டனிலிருந்து புறப்பட்டுச் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தனராம். இடையில் எந்த விதமான ஆபத்தும் இல்லாது 23 ஆயிரம் மைல் பறந்தனர் என்றும், இதுவரை யாரும் இவ்வளவு தூரம் பறந்ததில்லை என்றும் சொல்லப்படுகிறது.

***

**கேன்யாவில் தீ விபத்து:**—கென்யா மாவு மில்லில் தீப்பற்றிக்கொள்ள, கோதுமை, சோளம் முதலிய தானிய வகைகள் வீணாயின வென்றும், இத்தீயினால் ஏற்பட்ட நஷ்டம் 50 ஆயிரம் பவுன் விலை மதிப்புள்ள தானியம் என்றும், ஆகவே உணவுப் பொருளின் விலை ஏறுமென்றும் நைரோபி என்னுமிடமிருந்து வந்த தந்திச் செய்தி கூறுகிறது.

***

**யுத்தக்கடன் :**—ஜெர்மன் யுத்தம் ஏற்பட்ட காலை இத்தாலியர் இங்கிலாந்தினிடமிருந்து வாங்கிய கடனைக் கொடுக்கும் விஷயமாய் ஏற்பட்ட முடிவின்படி இத்தாலிய அரசாங்கத்தார் இதுவரை 5 தடவைகளில் தடவைக்கு 20 லட்சம் பவுன் வீதம் கொடுத்தனர். செப்டம்பர் மாதம் 20 தேதி யன்று 6 வது தடவையாக 20 லட்சம் பவுன் கொடுக்கப் பட்டதென அயல் நாட்டுச் செய்தி கூறுகிறது.

***

**லண்டன் லார்ட் மேயர்:**—லண்டன் நகரின் அடுத்த லார்ட் மேயர் பதவி ஸர்.கின்ஸ்டன் ஸ்டட் என்பவருக்கு வரும் என்று ஒரு வதந்தி உலவி வருகிறது. அவர் சமூகத் திருத்த வேலையில் ஈடுபட்டு உழைத்து வருபவராம். சிறு பொழுதில் கிர்கெட்டு விளையாட்டில் தேர்ச்சி பெற்றவராம். லார்டு மேயர் தேர்தல் செப்டம்பர் மாதக் கடைசியில் நடக்கு மென்றும், லண்டன் முனிசிபல் சபையினர் அவரையே தலைவராகத் தெரிந்தெடுக்க அபிப்பிராயங் கொண்டுள்ளார் என்றும் தெரிகிறது.

***

**சங்கீதத்தின் பெருமை:**—சங்கீதத்தின் பெருமையைப்பற்றி டாக்டர் பார்லிபெக் என்னும் அறிஞர் கூறுவதாவது:—

"சங்கீதம் தனிப்பெருமைகொண்டது. சங்கீதம் மனத்திடைச் செய்துவைக்கும் லயம் பெரியது. வேறு எந்தக் கலைக்கும் அவ்வாற்றல் இல்லை. பொழுது போக்கிற்காக ஏற்பட்டதல்ல சங்கீதம். தலைக்கு எண்ணெய் தடவி வாரிக்கொள்ளுகிறோம். எண்ணெயும் சீப்பும் தலைக்கும் கூந்தலுக்கும் செய்யும் நன்மையைச் சங்கீதம் உள்ளத்திற்குச் செய்துவைக்கின்றது."

***

**எம். என்.ராயின் மறுப்பு :**—பல்ஷிவிக்கர் இயக்கம் இந்தியாவில் பரவாது தடுக்க இந்தியச் சட்டசபையில் மசோதா வந்த சமயம் டில்லியிலிருக்கும் லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு ராயின் கடிதம் என்று ஒரு கிருபர் எழுதியிருந்ததைப்பற்றி ஸ்ரீ எம்.என். ராய் எழுதுவதாவது :—"நான் எந்தக்கடிதத்தையும் இந்தியாவுக்கு எழுதவில்லை. முடியுமானால் அரசாங்கத்தார் ருசுப்பிக்கட்டும். இல்லாத ஒன்றைக்கொண்டு அரசாங்கத்தார் அடக்குமுறைச் சட்டம் செய்ய முயல்கின்றனர். சட்டசபையினர் இந்தச் சட்டத்தை அரசாங்கத்தார் செய்ய முடியாது பார்த்துக்கொள்ள வேண்டும்.

**புதியகப்பல் :**—ஓரியண்டு பெனின்சுலா கப்பல் கம்பனியார் புதிய கப்பல் ஒன்றைக் கட்டியுள்ளார்கள். அது "இந்திய வைசிராய்" (The Viceroy of India) என்று அழைக்கப்படுமாம். கடந்த 15-ந்தேதியன்று லண்டனில் இராஜப்பிரதிநிதி இர்விங்கின் மனைவி அதை மிதக்கவிட்டார் என்று தெரிகிறது. அக்கப்பல் மின்சாரத்தால் ஓடும் என்றும் 450 முதல் வகுப்புப் பிரயாணிகளை ஏற்றக்கூடிய அளவுடைய தென்றும், 200 பேருக்கு மேற்பட்ட இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள்செல்ல வசதி செய்யப்பட்டுள்ள தென்றும் 400 கப்பலோட்டிகளுக்கு அதில் இடவசதி இருக்கின்றது என்றும், ஐரோப்பிய, இந்திய, முஸ்லிம் சாப்பாடு சமைக்க வசதி உண்டென்றும் தெரிகிறது.

***

**சென்னைக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம்:**—சென்ற வாரம் மஹாஜன சபை மண்டபத்தில் கூடிய சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள்:—

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்ட முழுவிடுதலைச் சங்கத்தை இக்கூட்டம் ஏற்பது மல்லாமல் இம்மாகாணத்தார் இச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவேண்டு மென்று மஹாஜனங்களைக் கேட்டுக் கொள்கிறது.

சென்னை அரசாங்கத்தார் சைமன் கமிஷன் வேலையைத் தடுக்கும் பொருட்டுக் கையாண்டு வரும் அடக்குமுறைகளைக் கண்டிப்பதுடன், ஜனங்கள் பயந்துவிடாது கமிஷன் பகிஷ்காரத்தைச் செய்துமுடிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இதுவரை அடக்குமுறைச் சட்டத்தின் வயமான காங்கிரஸ் தொண்டர்களுக்குக் காங்கிரஸ் கமிட்டியார் உதவி செய்யவேண்டும் என்றும், பஹிஷ்காரவேலையை விடா முயற்சியுடன் நடத்தவேண்டு மென்றும் இக்கமிட்டி கூட்டம் தீர்மானிக்கிறது.

இன்னும் சில தீர்மானங்களும் செய்யப்பட்டுக் கூட்டம் கலைந்தது.

***

**ஸ்ரீமாக்லலண்டிற்கு விருந்து:**—சென்னை Y. M. C. A. காரியதரிசியாயிருக்கின்ற Mr. D. F. மாக்லலண்ட் ஒரு வருட ரஜாவில் அமரிக்காவிற்கு இன்றைய தினம் புறப்படுகின்றனர். இவர் தென் இந்தியாவில் தன்னுடைய நல்ல குணத்தினாலும் விசாலமான அறிவினாலும் இந்தியர்களிடத்திலுள்ள சகோதர அன்பினாலும் எல்லாருடை மதிப்பையும் பெற்றுள்ளவர். சென்ற செவ்வாய்க்கிழமை மாடர்ன் ஹிந்து ஹோட்டலில் அவருக்காக நடந்த விருந்தில், T R. வெங்கடராம சாஸ்திரியார், T. ரங்காச்சாரியார், ஜஸ்டிஸ் தேவதாஸ், ஜஸ்டிஸ் ராமேசம், போன்ற பலர் வந்திருந்ததே Mr. மாக்லலண்டின் பெருமைக்குச் சான்றாகும்.

***

**கடற்கரைக் கூட்டம்:**—சென்ற ஞாயிறு மாலை திருவல்லிக்கேணிக் கடற்கரையில் பொதுஜனக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியினரும், முகமதிய சங்கத்தினரும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். காங்கிரஸ் தொண்டர்களை அரசாங்கத்தார் கைது செய்ததைக் கண்டித்து ஸ்ரீமான் குழந்தை, ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் முதலிய பலர் பேசினர். பின்னர், சிறைக்குச் செல்லும் தொண்டர்களின் குடும்ப ஸம்ரக்ஷணைக்காக நிதி சேர்க்கவேண்டுமென்றும், சைமன் கமிஷன் பகிஷ்கார வேலையை மும்முரமாய்ச் செய்ய வேண்டுமென்றும், உதவி மறுத்தல் காலம்போல் கைது செய்யப்படுவோர் வழக்காடாதிருக்க லாகாது என்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

18902

# THOUGHTS FOR STATESMEN

from

## MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

## T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

## Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, prcduce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of cur society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.



A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

## Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

**FOREWORD**

BY

## Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

**Price Rs. 5-8-0. (V.P. Charges extra)**

***MANAGER:—***

***"KALANILAYAM"***

***11, VELLALA STREET.***

**Purasawalkam, MADRAS.**


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)

வதைஇராமன் அவன் செயலாய்ச் செய்யவேண்டும்என்ற நோக்கம் கம்பர்படி கோசிகனுக்கு இருந்ததாகையால் கம்பராமாயணத்தில் இங்கு இப்படி வெளிப்படையாய் விதிக்கும் சொற்கள் காண்பதற்கில்லை. சொல்லாது தீராது, என்றநிலை எய்தியபின்னரே கோசிகன், 'அரக்கியைக் கோறி' என்று கடையாகப் பணித்ததைப் பார்த்தோம். இக்கட்டளையை இன்னவாறு இடம்பெயர்த்தெடுத்துவிட்ட கம்பர், இனி வான்மீகி முனிவரைத் தொடர்ந்து தாடகையின் வரலாற்றைக் கோசிகனைக் கொண்டு இராமனுக்குச் சொல்விக்கின்றார். அதனிற் பேதம் ஒன்றும் பெரிதுமில்லை. ஆனால் வான்மீகத்தில் தாடகையின் வரலாற்றைச் செப்பிவரும் விச்வாமித்திரனது வசனத்தின் இறுதியாகக் கீழ்வரும் கட்டுரை காணப் பெறுகின்றது:—

"ஓ இராமா,மிகவும் பயங்கரமான இந்தத் துஷ்ட யக்ஷிணியை நீவதை செய்யவேண்டும். அப்பொழுதுதான் பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும் நன்மை யுண்டாகும். சாபத்தால் பற்றப்பட்டிருக்கும் இந்த யக்ஷிணியை வதை செய்கிறவர் உன்னைத் தவிர இம்மூவுலகத்திலும் ஒருவரும் இல்லை. நீ தாடகையைப் பெண்பால் என்றுகருதி அவளை வதைப்பதில்அருவருப்பு வைக்கக்கூடாது. பெண்பாலைக் கொல்லுவது வீரர்களுக்குஅநீதி என்றாலும் நீ இராஜ குமாரனானபடியால் நான்கு சாதியார்களுடைய க்ஷேமத்துக்காக இக்காரியத்தைச் செய்தே தீர்க்கவேண்டும். எதாவது ஒரு காரியஞ் செய்வதனால் சனங்களுக்கு நன்மை உண்டாகுமானால் அக்காரியம் கொஞ்சம் கெடுதலா யிருந்தாலும், சிறிது நியாயமும் தருமமும் இல்லாமலிருந்தாலும் அதை அரசன் அவசியமாகச் செய்ய வேண்டும் என்பது முறை. உலகத்தைப் பாதுகாத்தலையே நோன்பாகக் கொண்ட அரசர்களுக்கு இதுதான் குலாசாரம். ஆகையால் இந்தக் கொடிய அரக்கியை நீ கொன்றே தீர்க்க வேண்டும். ஏனெனில் இவளிடம் ஒருவித நீதியுமில்லை. இப்படி வேறு யாராவதுசெய்ததுண்டா என்று நீ கேட்கலாம்; முன்னொரு காலத்தில் இவ்வுலகத்தை நாசஞ்செய்ய யத்தனித்த விரோசனனுடைய பெண்ணாகிய மந்தரையை இந்திரன் பெண் என்று பாராமல் கொன்றான். அன்றியும் முன்னொரு காலத்தில் இவ்வுலகத்தில் இந்திரனில்லாமல் தொலைத்துவிட வேண்டுமென்று யத்தனித்த பிருகுவின் மனைவியும் சுக்கிரனுடைய தாயுமாகிய கியாதி என்பவளை ஸ்ரீ மகா விஷ்ணுவே வதைத்தார். இன்னும், பல சிறந்த இராஜகுமாரர்களும் துஷ்டப் பெண்களை வதை செய்திருக்கிறார்கள்.

'பெண்ணிந்தத் தாடகையைக் கொல்லல் நீதியோ' வென்று இராமன் வாய்திறந்து வினவியதாகக் கம்பராமாயணத்திலுமில்லை, வான்மீகி இராமாயணத்திலுமில்லை. "பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்" என்றேனும் கம்பர் கூறி, அவன் 'சிந்தைக் கருத்தெலாம் அறிந்து நான்மறை அந்தணன்' சமாதானம் செப்ப நேர்ந்ததாகக் காட்டுகின்றார். வான்மீகத்திலோ, இராமன் நினைத்தானோ இல்லையோ, நினைக்கத்தான் நினைப்பான் என்ற நிச்சயத்தால் விச்வாமித்திரன் அமைதியுரைக்கப் புக்கனன். ஆதலால், இந்த வேறுபாடு பெரியதொரு பொருளன்று. மற்றுப் பொருளுடை வேறுபாடேதன்கண் உளதெனில் இராமனுக்கு இதனை விச்வாமித்திரன் எடுத்துக் கூறிய இடத்திலாம். தாடகையை எதிர்ப்பட்டு அவன் 'துன்னெனும் வினைத் தொழில் தொடங்கியபின்,' வடிக்கணைத் தொடுக்கிலாய் ஆறிநின்ற இராமனுக்குக் கம்பர்படி விச்வாமித்திரன் உணர்த்திய உரைகளில் இக்கருத்திற் சில அடங்கியிருக்கின்றன. இதனால், விச்வாமித்திரனுக்குப் பதில் உரைத்த இராமனது வசனங்களும் இவ்விரு நூல்களிலும் முன்பின்னாய் வருதல் இன்றியமையாததே. இடம் எதுவேனும் கம்பர் நூலிலும் வான்மீகத்திலும் கோசிகனது கூற்றும் இராமனது பதிலும், பொரும்பான்மை, தம்முள் ஒத்திருக்கின்றன. ஆயினும், நுண்ணிய வேற்றுமையும் இவ்விருதிறத்தோர் கருத்தினுள்ளும் இல்லாமற் போகவில்லை. "அறனல்லவும் எய்தினால், அது செய்க என்று ஏவினால் மெய்ய, நின்னுரை வேதம் எனக் கொண்டு செய்கையன்றோ அறம் செய்யும் ஆறு" என்று இராமன் இங்குக் கூறியதற்கு நேராக வான்மீகத்தில் அவன் சாற்றிய மாற்றம் இவை:—

"எனது தந்தையார் இட்ட கட்டளையின்மேல் நான் வைத்திருக்கிற விசுவாசத்தாலும் கௌரவத்தாலும் இக்கட்டளை கௌசிகரிடும் கட்டளை என்பதாலும் நீங்கள் என்ன சொன்னாலும் விசாரியாமலே செய்யக் காத்திருக்கிறேன். அயோத்தியில் நாம் புறப்படும் பொழுது பல பெரியோர்கள் முன்னிலையில் என்னிடம் என் தந்தையாரகிய தசரத மகாராஜர் 'விச்வாமித்திர முனிவர் என்ன சொல்லுகிறாரோ அது உன்னால் அவசியம் செய்யப்பட வேண்டும்' என்று கட்டளை யிட்டிருக்கிறார். அது தள்ளத் தக்கதன்று. ஆகையால் நான் என் தந்தை சொற்படி தங்கள் கட்டளையை மேற்கொண்டு தாடகையை வதைக்கிறேன்; பசுக்களுக்கும் பிராமணர்களுக்கும், இந்த நாட்டுக்கும் வெகுவித நன்மை யுண்டாகும்பொருட்டுத் தருமாத்துமாவாகிய உமது சொற்படி நடக்கச் சித்தனா யிருக்கிறேன்.

இவ்வாறு, தாடகையின் தன்மையும் வரலாறும் கேட்டறிந்து, அவளைக் கொல்லல் வேண்டும் என்று கோசிகனால் விதிக்கப்பெற்று, அது செய்தல் தக்கதோ அன்றோவென முனிவன் எடுத்துக் காட்டிய தர்மங்களையும் உதாரணங்களையும் ஓர்ந்து பின் அவளை மாய்ப்பதற்கு மனமொவ்வி அமைந்த இராமன் தாடகை தன்பால் வந்தெய்தும் வண்ணம் வில்நாண் ஒலி எறியவே, அவ்வொலி கேட்டவச் சழக்கி வெகுண்டு அவர்முன் தோன்றியவுடன் இராமனும் போர் தொடங்கி அவளைத் தொலைத்து வெற்றி வீரனாய் நின்றான், என்பது வடநூற்படி இந்நிகழ்ச்சியின் வரன்முறையாயிற்று. கதை வகையில் இடையறாது தொடருமாறும் இதுவேயாகும். நாடக அரங்கமேடையை நினைவிற்கொண்டு இயக்குகின்ற கம்பரோ, தாடகையின் பிறப்பு வளர்ப்புத் தீச்செயல்களை விச்வாமித்திரன் சொல்லிவரு மளவில், அவளைக் கொல்லுமா றேதும் பணியா முன்னரே 'எங்குறைவதித் தொழில் இயற்றுபவள்' என்று இராமன் வினவுவதும், அவள் 'மைவரை நெருப்பெரிய வந்தெனத் தானுகத் தோன்றுவதும் உடன் நிகழும்படி பிணைத்துக் கடங்கலுழ் தடங்களிறு கையொடு கைதெற்றா வடங்கொள நுடங்கு மிடையாளைச் சிலம்புகள் சிலம்பிடை செறித்த கழலோடு நிலக்கிரிகள் பின்தொடரக் களத்தினகவயின் நம் காட்சிக்குக் கொணர்ந்து, அவள் துடித்த புருவமும் பிறையெனப் பற்கள் பிறங்கிய பிலவாயும் உடையளாய்க் கனலென விழித்து இடியும் குலைந்துக ஆர்த்து எயிறுதின்று அயில்பற்றி 'ஆகமுற உய்த்தெறிவன்' என்று எதிரழன்று சூலத்தை ஓச்சும் நிலையினை அவர் நாடகமுறைக்கேற்ற விரைவினில் நாட்டிவிட்டார். அண்ணல் இராமனோ சிறிதும் சலியாது சார்ந்தமாய் வில்லும் தன் கரங்களும் ஓங்காது தாழ நீலக் குன்றுபோல் நிற்கின்றான். முனிவனோ தாடகையின் தூக்கிய சூலத்தையும் இராமனது முகத்தையும் பதறி நோக்குகின்றான். அரக்கியின் உருவையும் முனிவனது நிலையையும் தன் முன்னோன் முகத்தையும் மாறிமாறி ஊக்கமோடு உற்று ஆய்கின்றான் இளைய செம்மல். ஓங்கியவக் கூற்றெனுங் கொடியாள் சூலம் இமைக்குமுன் உய்த்தகுறி பாய்ந்தொறுக்கும். 'இந்நிலையி லென்னாங் கொல்' என எம்மனோர் துணுக்கமுடன் உற்றெழுந்த வியப்பினிற்கு உள்ளமீந்து வெற்றுடம்பாய் நிற்றல்வேண்டும்.

தாடகை கொடியாள் என்று விச்வாமித்திரன் இராமனுக்குக் கூறியுளானேயன்றி வான்மீகத்தைப்போல் "நீ அவளைக் கொல்லவேண்டுமென்று நான் கட்டளை யிடுகின்றேன்," என்னும் பாயிரத்தோடு அவள் வரலாற்றை ஆரம்பித்ததில்லை. ஆதலால், இவளைத் தான் வதைக்கவேண்டு மென்னும் 'அது' முனிவனது கருத்து என்று நமதண்ணல் ஊகிக்க வேண்டியதாயிற்று. ஊகித்தும் வடிக்கணை தொடுக்காமல் நிற்கின்ற இவன், பெண்ணெனும் நினைவினால் தாழ்கின்றான், என்பதை முனிவனும் மாறி ஊகிக்கவே ஆயிற்று. இதன் மேல், கோசிகன் இராமனை மென்மை மொழிகளால் தகைந்து "அரக்கியைக் கோறி" என்று முடிவுரையாக ஏவியதும் அதனை இயற்றப் புகுந்த இராமனது மனதின் பான்மையும் முன்னர்க்கண்டோம். உயிர்ப்படங்க யாவரும் கோசிகன் வாயையும்இராகவன் கையையும் உற்றுநோக்கி நிற்குமாறு கம்பர் இந்நாடகத்தை நிகழ்த்திய திறம் பாராட்டற்பாலதே. ஆயினும் என்! ஒருபுறம் இவ்வகை வடநூலின் உயர்வடைந்து நடிக்கவைத்த கம்பர் மறுபுறம் வான்மீகி முனிவருக்குத் தாழ்ந்து போயினாரோவென் றெண்ண நேர்கின்றது.கோசிகன்வாயையும் இராகவன் கையையும் உற்றுநோக்கி நிற்கின்ற நாம் தாடகையின் சூலத்தையும் தொடர்ந்துநோக்கா தமைவது எங்ஙனம்இயலும்! ஆயின், விச்வாமித்திரன் தன் விரிந்த உரைகளால் இராமனைத் தெருட்டிப் பின் போரிற்கு ஏவுங்காறும் அவள் யாது செய்துகொண் டிருந்திருப்பாள்? "இவர்கள் பேசிவரும் உரையெல்லாம்முடியட்டும்,பின் ஓங்கிய சூலத்தை உய்க்கின்றேன்" என்று காத்திருப்பாளோ இவ்வரக்கி! இது இயற்கையன்று. ஆதலால் நாடகநிகழ்ச்சி இங்கு இடறுகின்றது. இராமனோடு கோசிகன் பேசி முடியும்வரையில் தாடகை தொடங்கியபோர் இடையூறுற்று நிற்குமாறு யாதானுமொரு சூழ்ச்சி செய்தமைத் திருத்தல்வேண்டும்.



அது செய்திலர் கம்பர். ஒருகால், இப்படலம் 53-வது செய்யுளிற்கும் 54-வது செய்யுளிற்கும் இடையே செய்யுளொன்றிரண்டு பிரதிகளில் விட்டுப்போயிருக்கின்றனவோ, யாதோ! விச்வாமித்திரன் தன் தவவலிமையால் நிமிர்ந்த அவள் கை தாழாவண்ணம் தடுத்து, "இராம, நம்மைக் கொல்வான் புகுந்த இவ்வரக்கியைக் கண்டும் நின் கார்முகம் குனிக்காதிருப்பதென்!" என வியந்திருக்கலாம். இக்கருத்தோ, அல்லது வேறேதேனுமோ அடங்கிய பாசுரமொன்று மறைந்திருப்பினும் இருக்கலாம் என்னும் ஐயத்தை, "அண்ணல் முனிவற்கு அது கருத்து எனினும்", என்று தொடங்கும் செய்யுளில் வந்துள 'அது' என்னும் சொல் வற்புறுத்துகின்றது. 'அது' என்பது உலகறி சுட்டல்ல. ஆதலால் அதனிற்குப் பொருளாய உரையொன்று வந்திருத்தல் வேண்டுமெனச் சித்தித்தல் தக்கதாம். அல்லாக்கால், தான் தொடங்கிய போரை ஏற்றெதிர்க்காது நிற்கின்ற இராமனொடு பொருதல் தனக்கு வீரமன்றெனத் தாடகை தாழ்ந்தாளெனக் கொள்ளினும் கொள்ளலாம். அவ்வரக்கியின்பால் இப்போர்த் தருமம் தோன்றுமென் றெண்ணுத லருமையாயினும் இந்தக் கொள்கைக்கும் ஆதாரமாக, "மெய்ய, நின்னுரைவேத மெனக்கொடு செய்கையன்றோ அறஞ்செய்யுமாறு" என்று இராமன் பொருதற் குடன்பட்டனன் என்று தெரிந்தவுடன்,

> கங்கைத் தீம்புன லுடன்க நந்தையம்
> மங்கைத் தீயனை யாளும னக்கொளாச்
> செங்கைச் சூலவெந் தீயினைத் தீயதன்
> வெங்கட் டீயொடு மேற்செல வீசினாள்.

[மதுரமான நீருடைய கங்காநதி சூழ்ந்த கோசல நாடனான இராமனது கருத்தை அந்தப் பெண்ணுருக் கொண்ட நெருப்பனையவளும் மனதில்கொண்டு, சிவந்த கையிலுள்ள சூலமாகிய கொடிய நெருப்பைத் தீய தன் வெப்பம் மிகுந்த கண்கள் கக்கும் தீயோடு சேர்த்து அவர்கள்மேல் தாக்குமாறு எறிந்தாள்.]

என்று கூறும் செய்யுள் தோன்றுகின்றது. இராமனது கருத்தைத் தெரிந்து கொண்டு அப்புறம் போர் முனைக் தாடலுற்றாள் என்று இயம்பியதினின்று நாடகக் காட்சியினிடையே இயற்கையும் வழுவாது கம்பர் இவ்வண்ணம் காத்தனர் என்று தேறுதலடைய முயல்வோமெனினும், எதிர்ப்பட்ட மக்களைப் புடைத்துண்ணும் இழிதொழில் சழக்கி போர்முறைக் கடங்கித் தாழ்ந்தாள் என்னும் புணர்ப்பு ஏற்றுக் கொளற்பாலதோ வெனும் சங்கை எஞ்சியே நிற்கின்றது.

T. N. சேஷாசலம்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனாம். டெலிபோன் நெ. 3311.